Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 21 ஞாயிற்றுக்கிழமை (07.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 068

# எதிர்காலத்தில் வளமான வாழ்வைப்பெற தெளிவான அரசியல் நிலைப்பாடு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து



மக்கள் சரியானதும், தெளிவானதுமான அரசியல் நிலைப்பாட்டை முன்னெடுக்கும் பட்சத்திலேயே எதிர்காலத்தில் வளமான வாழ்வை பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் அவர்கள் வாழ்வாதாரத்தில் மேம்பாட்டைக் காண முடியுமென்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைசசரின் செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற தென்மராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் சரியானதொரு அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டியது அவசியமானதுடன் அதனூடாகவே எதிர்காலத்தில் வாழ்வாதாரத்தையும்,

பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறு சரியான நிலைப்பாட்டை எடுக்காத பட்சத்திலேயே கடந்த காலங்களில் தவறான அரசியல் வழிநடத்தல்களினால் பாரிய அவலங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## வேலணை வங்களாவடியில் 4 கடைகளில் கொள்ளை



(வேலணை)

நள்ளிரவில் நான்கு கடைகள் உடைக்கப்பட்டு துணிகரமாக கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் வேலணை வங்களாவடியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று நள்ளிரவு உணவகம், கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம், ஐஸ்கிறிம் கடை, களஞ்சியசாலை என நான்கு கடைகள் துணிகரமாக ஓடு பிரித்து கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

தொலைபேசி விற்பனை நிலையத்திலிருந்த பணம் மற்றும் 30ஆயிரம் ரூபா பெறுமதியான மீள் நிரப்பு அட்டைகள், என்பனவும் உணவகத்திலிருந்து குளிர்பானங்கள், மீள் நிரப்பு அட்

19 ஆம் பக்கம் பார்க்க

## வேட்பாளர்களின் யோசனைக்கு காத்திருக்கிறது கூட்டமைப்பு

### கூறுகிறார் சுரேஷ்

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரதானமான பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகிறார்கள் என்பது பற்றிய யோசனைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிததுள்ளார்.

ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணைகளுக்கோ, சமஸ்டி முறையிலான தீர்வுக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை என்று எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, தெரிவித்துள்ளது குறித்து, வவுனியாவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன்-

தமிழர்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப்போகிறார்கள் என்ற வேட்பாளர்களின் யோசனைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திருக்கிறது.

அவை வெளியான பின்னரே யாரை ஆதரிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானிக்கும்.

ஊழல் இருக்கிறது என்று எமக்குத் தெரியும், குடும்ப ஆட்சி நிலவுகிறது என்பதும் தெரியும். இவை அகற்றப்பட வேண்டும் என்பதையும் நாம் அறிவோம்.

ஆனால் தமிழர்கள், வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக கின்றனர்.

வடக்கிலுள்ள மக்களின் பிரதானமான பிரச்சினை, போர் முடிந்த பின்னரும், அங்குள்ள பொதுமக்களில் ஒரு பகுதியினரால் சொந்த நிலங்களுக்குச் செல்ல முடியவில்லை.

அவர்களின் நிலங்களை படையினர் தொடர்ந்தும் அபகரித்து வருகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## சமையல் எரிவாயுவிலை நள்ளிரவு முதல் குறைப்பு

12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 250 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலைக் குறைப்பு அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் 2 ஆயிரத்து 146 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஆயிரத்து 896 ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை மாற்றம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எரிபொருளுக்கான விலைகளும் நேற்று நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அக்காவின் கணவரின் ஆபாசசெயல் கொதித்தெழுந்தார் மைத்துனி

(கரணவாய்)

தனது அக்காவின் கணவர் ஆபாசப்படத்துடன் தனது படத்தையும் இணைத்து முகப்புத்தகத்தில் வெளியிட்டும் திருமணம் செய்யவுள்ள இளைஞருக்கும் அனுப்பியுள்ளதனை அவமானப்படுத்தியுள்ளதாக யுவதி ஒருவர் நெல்லியடி பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அல்வாயைச்சேர்ந்த 28 வயது யுவதியின் அக்காவின் கணவரான 30 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு ஆபாசப்படத்துடன் யுவதியின் படத்தையும் இணைந்து முகப்புத்தகத்தில்வெளியிட்டதுடன் யுவதியை திருமணம் செய்யவுள்ள இளைஞருக்கும் தெரியப்படுத்தி அடாவடித்தனமாக தனது மைத்துணியை அவமானப் படுத்தியுள்ளார்.இதனால் ஆத்திரம் அடைந்த யுவதி இது விடயம் தொடர்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் பிரச்சினை சென்னையில் இன்று மாநாடு

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்து, சென்னையில் இன்று மாநாடு நடத்தப்படவுள்ளதாக தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதார பிரச்சினைகள் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் இதில் விவாதிக்கப்படவுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த சில வல்லுநர்களும், இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை கொண்ட அமைப்புகளையும் சேர்ந்த தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க








யாழ். பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு 30 மோட்டர் சைக்கிள்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.மோடடார் சைக்கிள்களை யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாத் ரண சிங்க வழங்கி வைத்தார். (25)

# மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள்; தயாராக இருக்கின்றது இந்தியா

## துணைத்தூதரக அதிகாரி டி.மூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் செய்ய இந்தியா தயாராக இருப்பதாக இந்தியத் துணைத்தூதரக உதவி அத்தியட்சகர் எஸ்.டி.மூர்த்தி, நேற்று தெரிவித்தார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் வி.கனகசபை தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்குள்ள மாற்றுத்திறனாளிகள் பிரித்துப்பார்க்கவோ பாவம் என நினைக்கவோ வேண்டியவர்கள் அல்ல.

அவர்களை பார்த்து பரிதாபப்படாது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். யாழ்ப்பாண மக்களிடம் பொதுவாக மனிதனை நேசிக்கும் ப்ண்பு இருக்கிறது. பெயர் சொல்லாது ப்லர் இன்றும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றனர். யாழ். மக்களிடம் நான் இன்னும் கேட்டுக்கொள்வது மாற்றுத்திறனாளிகளை மதித்து அவர்களை எம்முள் ஒருவராக சமமாக நல்ல விடயங்களை செய்ய வேண்டும் என்பதே.

அவர்களுக்கு இந்திய அரசு உதவுவதற்கு எப்போதும் தயாராக உள்ளது. எம்மால் முடிந்த உதவியை அவர்களுக்கு செய்வோம் என உறுதியளிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வன்னி விழிப்புலனற்றோர் சங்க தலைவர் ச.ரூபராஜா கருத்துத் தெரிவிக்கையில், வன்னியில் பலர் தமது அங்கங்களை இழந்துள்ளார்கள். அவர்களையும் எந்த வித வேறுபாடும் இன்றி ஒன்றிணைத்து செயற்பட வேண்டும்.

முன்பு செவிடர்கள், குருடர்கள் என்று அழைத்த நாம் இன்று மாற்றுத்திறனாளிகள் என அழைக்கிறோம். அந்த வகையிலே நாம் உயர்ந்து நிற்கிறோம்.

அது போலவே வங்கிகளிலும் மற்றய பொது இடங்களிலும் மாற்றுத்திறனாளிகளை அரவணைத்து செயற்பட வேண்டும். அதன் மூலம் நீங்கள் உயர்ந்த சேவையாற்றுபவர்களாகிறீர்கள் எனத் தெரிவித்தார்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதரக உதவி அத்தியட்சகர் எஸ்.டி.மூர்த்தி, வேல்ட் விஷன் நிறுவன செயற்பாட்டு முகாமையாளர் ஜெயால்ட் அன்ரனி, இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குனர் ஐ.தவேந்திரன், விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | புதுயுகம் |
| Am 10.00 | தமிழ் பேசு தமிழா |
| Am 10.30 | Hello DD |
| Am 11.00 | அதிர்வுகள் |
| Am 12.00 | ஆரோகனம் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | "அரண்மனை" திரைப்படம் |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | IT.Com |
| PM 07.30 | மக்கள் முகம் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# பிள்ளையார் பெருங்கதையும் கஜமுகசூர சங்காரமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி மருதடி விநாயகர் ஆலய பிள்ளையார் பெருங்கதை விழா இன்று ஆரம்பமாகி 21 தினங்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 3 மணிக்கு பிள்ளையார் பெருங்கதை படிப்பும் பூசையும் இடம்பெறவுள்ளதுடன் 20 ஆம் நாளான வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கஜமுகசூர சங்கார நிகழ்வு இடம்பெறவுள்ளது.

27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பெருங் கதை படிப்பும் பெருவிழாவின் பூர்த்தியும் இடம்பெறும்.

இவ்விழா ஆலய பிரதம குரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய அர்ச்சகர் பிரம்மஶ்ரீ சி.சிவகஜ குருக்களினால் நடாத்தப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

# முகப் புத்தகத்தில் யுவதியின் படம் வெளியிட்ட இளைஞன் கைது

(கரணவாய்)

காதலிப்பதாகத் தெரிவித்து முகப் புத்தகத்தில் யுவதி ஒருவரின் புகைப்படத்தை வெளியிட்டு அவரை அவமானப் படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியின் புகைப்படத்தை தனியார் வங்கியொன்றில் வேலை செய்யும் வடக்கு வரணியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் முகப் புத்தகத்தில் வெளியிட்டு காதலிப்பதாக அவமானப்படுத்தியுள்ளார்.

இது குறித்து பிரஸ்தாப யுவதி நெல்லியடி பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து இளைஞர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். (18)


## வீடு விற்பனைக்கு

யாழ்.கோவில் வீதியில் (ஆஸ்பத்திரி வீதிக்கும் பிரதான வீதிக்கும் (A9) இடையில்) அமைந்துள்ள அழகான 2 மாடி வீடு (2500 சதுரஅடி) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 0714984261, 0773960512 (R/380)

## டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப் படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680, 077 592 5088. (C/3589)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 314
திகதி - 2014.12.05
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள்: 26 50 57 62 — ஆங்கில எழுத்து: O

பரிசுத் தொகை ரூபா. 18,768,860/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 200 | 200,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 324 | 324,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9190 | 551,400/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4668 | 186,720/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 119623 | 2,392,460/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17427 | 348,540/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 18,768,860/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,353,120/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 19,002,760/-

2014.12.09ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3918)


# கண்ணீர் அஞ்சலி



## சந்திரசேகரம் பரமேஸ்வரி

எமது (J/334) எழுதுமட்டுவாள் வடக்கு கிராம மக்களின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பிரதிநிதியும் மக்கள் அபிவிருத்தி வழிகாட்டியாகத் திகழ்பவருமாகிய செல்வி சந்திரசேகரம் கல்பனா அவர்களின் தாயார் சந்திரசேகரம் பரமேஸ்வரி நேற்று (06.12.2014) காலமாகி உள்ளார்.

அன்னாரின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

படித்த மகளிர் திட்டம்
மருதங்குளம், கலியாணக்குளம்
உப்புவில், கழிக்கரை, பழையவாய்க்கால்,
ஓட்டுவெளி வாழ் மக்கள்.

(R/270)

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2014
பெண்மை எனும் மென்மைக்குள் பெண் தன்னை அடக்கிக் கொள்ளாது. மெல்லினத்தோடு வல்லினத்தையும் இணைத்து சமத்துவமான சமுதாயத்தின் நாளைய நாட்களுக்காய் இன்றே ஒன்றிணைவோம்.

# பேருந்து தரிப்பிடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

மன்னாரில் உள்ள சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, புனித சவேரியார் பெண்கள் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு முன்பாக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் ஏற்பாட்டில் பேருந்து தரிப்பிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

வடமாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனிஸ்வரன் நேற்று முன்தினம் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில் மன்னார் செபஸ்தியார் பேராலய உதவி பங்குத்தந்தை, மன்னார் இந்து மத குருமார்களின் தலைவர் வாசுதேவ குருக்கள், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம், பிரதி நகர முதல்வர் ஜேம்ஸ் ஜேசுதாசன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் எஸ். ஜிப்ரி, கல்லூரிகளின் அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கைதடி மேற்கு அண்ணமார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கார்த்திகை விளக்கீட்டு பூசையின் போது சுவாமி உள்வீதி உலா வருவதையும், சொக்கப்பானை எரிவதையும் காணலாம். (51)

# பிரியாவிடை

(வவுனியா)

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் இளங்கதிர் முன்பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்று தரம் 01 இற்கு செல்லும் மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் மிக அண்மையில் நடைபெற்றது.

வவுனியா தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் பணிப்பாளர் செல்வராசா சந்திரகுமார் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

முன்பள்ளியில் கற்ற மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். (90)

# பொற்பதி சரஸ்வதி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி அறிவாலயம் நடாத்தும் சரஸ்வதி முன்பள்ளி மற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலை கலைவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை உபதலைவியும் சரஸ்வதி முன்பள்ளியின் தலைவியுமான திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ராஜேந்திரா மற்றும் டாக்டர் திருமதி நளினி ராஜேந்திரா தம்பதியர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பி.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை கணக்காளர் வே.ம.சுப்பிரமணியம், யாழ்.ஆனைக் கோட்டை அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் அ.அரசகுலசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து முன்பள்ளி மற்றும் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளன.


## சேவைநலன் பாராட்டு

ஊர்காவற்றுறை மரியன்னை ஆலய பங்குத்தந்தையும் சிறந்த சமூக சேவையாளருமான சி.ஜி. ஜெயக்குமார் அடிகளாரின் சேவை நலன் பாராட்டு விழா இன்று பி.ப. 4.30 மணிக்கு புனித மரியன்னை ஆலய அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த பாராட்டுவிழா ஊர்காவற்றுறை புனித மரியன்னை ஆலய நிர்வாக சபையினால் நடத்தப்படவுள்ளது.

## கும்பாபிஷேகம்

உடுப்பிட்டி வடக்கு கொம்மாந்துறை ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6.45 மணி முதல் 7.45 மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.



வடபுலத்தான் எழுதுவது...

# அவர்கள் இனவாதத்தை விட்டால்தான் நாங்களும் இனவாதத்தை விடுவோம் என்றிருப்போர் என்ன "வாதிகள்"... யோசியுங்கள்....

போதை வஸ்தையும் விடப் படு பயங்கரமானது இனவாதம், மதவாதம், பிரதேச வாதம், நிறவாதம் போன்றவற்றினால் ஏற்படுகின்ற அழிவுகள் என்பதை உலகம் அனுபவித்தறிந்து, இதையெல்லாம் கைவிடுங்கள் என்று அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த வாதங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்போரைப் பிற்போக்குவாதிகள் என்றும், மடமைவாதிகள் என்றும் சொன்னது போய், இவர்களே ஜனநாயகத்துக்கும் அமைதிக்கும் தடையானவர்கள். இவர்களே முன்னேற்றத்துக்கு எதிர்ப்பானவர்கள். இவர்கள்தான் சமூகத்தை அழிக்கின்றவர்கள் என்று உலகம் சொல்கிறது.

அது மட்டுமல்ல இத்தகைய சக்திகள் கையில் ஆயுதம் வைத்திருந்தால் என்ன... மனசிலும் மூளையிலும் இந்த நச்சுக்கருத்துகளை வைத்திருந்தால் என்ன, எல்லாமே அழிவுதான் என்பதால் இந்தச் சக்திகளைப் புறந்தள்ளி வருகிறது. அல்லது அழித்து வருகிறது.

உலகத்தின் அதிபயங்கரம் என்பது இந்த வாதங்களால் பீடிக்கும் நிலைதான்.

இலங்கையில் இந்த வாதங்களால் ஏற்பட்ட அழிவுகளும் அனர்த்தங்களும் நாமறிந்தவை. இந்த வாதங்கள் உண்டாக்கிய பேரழிவிலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. இந்த வலியின்னும் எங்களை விட்டுப்போகவில்லை.

ஆனாலும் நாமின்னும் இந்த வாதங்களையே கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் எங்களின் கதி என்ன?

இனவாதத்துக்குப் பதில் இனவாதம் என்றால், கத்திக்குப் பதில் கத்தி. ரத்தத்துக்குப் பதில் ரத்தம்தானா.

அப்படியென்றால், விளைவு? முடிவு?

இனவாதத்தையே தமிழ்த்தேசிய சக்திகள் தீவிரமாகப் பரப்புகின்றன. இந்த நாட்டில் ஏனைய சமூகங்களோடு தமிழர்கள் வாழ முடியாது. அப்படி வாழக்கூடாது என்பதில் அவை பிடிவாதமாக இருக்கின்றன.

தமிழர்களை நம்ப முடியாது. அவர்கள் இந்தியாவோடு சேர்ந்து கொண்டு இலங்கைத்தீவு முழுவதையும் தங்களின் காலடிக்குள் கொண்டு வந்து விடுவார்கள். அப்படி நடந்தால் இலங்கையில் உள்ள சிங்களவர் அத்தனைபேரும் கடலுக்குள்தான் குதிக்க வேணும் என்று சிங்கள இனவாதிகள் சொல்கிறார்கள்.

இதெல்லாம் சுத்தமான பைத்தியக்காரத்தனம் அல்லாமல் வேறு என்ன?

ஆனால், இந்தப் பைத்தியக்காரத்தனத்தைத்தான் பெரும்பாலான மக்கள் (தமிழர்களும் சரி, சிங்களவர்களும் சரி) விரும்புகிறார்கள்.

அதனால்தான் இலங்கையில் இனவாதம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது.

இனவாதம் கொடி கட்டிப் பறக்கப் பறக்க மக்களின் கொடி தாழத் தொடங்கும். அதாவது மக்களின் கோவணம் கிழியத்தொடங்கும்.

இதைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?

இந்தப் போதைக்கு என்ன வைத்தியம் செய்வது?

இனவாதப் போதையை ஊட்டுவோரை எப்படித் தண்டிப்பது?

போதை வஸ்தை விரும்பாத மக்கள் எப்படி இனவாதப் போதையை விரும்புகிறார்கள்? இனவாதப் போதை உண்டாக்கிய பேரழிவுகளையும் அலைச்சல்களையும் அவமானங்களையும் பட்ட பிறகும் எதற்காக இந்த இனவாதத்தைப் பிறகும் பிறகும் விரும்புகிறார்கள்?

இது மக்களிடம் ஊறிப்போன பழக்கத்தின் பாற்பட்ட வினையா? அல்லது மக்கள் பழிக்குப் பழி தீர்க்க வேணும் என்ட வெறியோடுதான் – கத்திக்குக் கத்தி, இரத்தத்துக்கு இரத்தம் என்றமாதிரிச் சிந்திக்கிறார்களா?

அப்படியென்றால் இதனுடைய விதி என்னவாக இருக்கும்?

மீண்டும் போர்தானா?

அப்படிச் சிந்திக்கிறபடியால்தான் யாரும் நல்லிணக்கத்தை ஒரு முக்கியமான விசயமாகப் பார்க்கவில்லைப் போலும்.

அதனால்தான் மீண்டும் இனவாதப்போதைக்கு தாராளமாக இடமளிக்கப்படுகிறதா?

இது உலக நியதிக்கும் உலக நீதிக்கும் மாறான ஒரு விசயமே.

இது ஜனநாயக விதிமுறைக்கும் நடைமுறைக்கும் மாறான ஒன்றே.

இப்படியெல்லாம் உலக நியதிக்கு மாறாக உள்ள இந்தப் போதையை இப்படியே விட்டு வைக்கலாமா?

இந்தப் போதை வஸ்தைப் பரப்புவோரை இன்னும் அனுமதிக்கலாமா?

போதை வஸ்தை விரும்பாத சமூகம் இதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்க வேணும்.

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'தப்பித்தல்' தலைவர்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை ஏமாற்ற தேர்தலுக்குத் தேர்தல் அவிழ்த்துவிடும் சுத்துமாத்துக்களை இதோ தங்கள் பத்திரிகைகளில் விமரிசையாக ஆரம்பித்துவிட்டனர்.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போன்ற தனது வழக்கமான 'பாப்பாமலர் கதையை' எடுத்துவிடுகிறார். அதையே ராஜதந்திரமாகக் கண்டு கொள்ளக்கூடிய தமிழ்ப்பாமர ஊடகங்கள் கொட்டை எழுத்தில் வெளியிட்டுக் களிக்கின்றன.

மகிந்தவையா மைத்திரியையா ஆதரிப்பது என்ற கூட்டமைப்பின் முடிவை அவசரப்பட்டு அறிவிக்கக் கூடாதாம். அறிவித்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுவிடும் என்ற "உள்ளுக்க விட்டு அடிக்கும்" தங்களது "மாபெரும் ராஜதந்திரத்தை" "ரகசியமாக" பத்திரிகைகளில் மக்களுக்கு "குறிப்பு"க் காட்டுகிறாராம் தலைவர்.

அதாவது தாங்கள் மைத்திரியை ஆதரிக்கும் ரகசியத்தை வெளியிட்டால், சிங்கள மக்கள் திரண்டு மகிந்தவுக்கு வாக்குப் போட்டுவிடுவார்களாம். அதனால் அந்த ரகசியத்தை வெளியிட மாட்டேன் என்று பத்திரிகைகளில் அச்சடித்து "மெல்லமாக"க் காதோடு சொல்லுகிறாராம்!

போனமுறை பொன்சேகாவைப் பகிரங்கமாக ஆதரித்ததால் தான் அவர் தோற்றுப் போனார். அதுபோல் இந்தமுறை மைத்திரியும் தோற்றுப் போகக்கூடாது... எங்கள் மௌனத்தைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதுதான் இந்த அறிக்கையினுள் இருக்கும் ரகசியக் குறிப்பு.

அப்போது பொன்சேகாவிடமும் அவர்கள் தீர்வுக்கான எந்த வாக்குறுதியையும் கேட்கவில்லை. இப்போது மைத்திரியிடமும் தமிழர்களுக்கான தீர்வைச் சொல்லும்படி கேட்கும் வக்கும் இவர்களுக்கில்லை.

இந்த லட்சணத்தில் மறைமுகமான குறிப்புகள் காட்டுகிறார்களாம். எதுக்கு? மைத்திரியே ஜனாதிபதியாக வந்தாலும் பிறகு அவரையும் எதிர்த்து வீர முழக்கங்களிட்டபடி தங்களது பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிக்க வேண்டுமல்லவா! அது ஒன்று தானே குறி!

தனது நூறு நாள் திட்டத்தில் தமிழர் பிரச்சினைக்கு இடமில்லை என்று மைத்திரி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அதெல்லாம் பிறகு தேசிய அரசாங்கம் அமைத்து அதைப்பற்றி ஆராயலாமாம்!

அடக் கோதாரியே... அனைத்துக் கட்சித் தேசிய அரசாங்கத்தில் ஆராய்வதை ரண்டு வருசத்துக்கு முன்னமே போய் அனைத்துக் கட்சித் தெரிவுக்குழுவில் ஆராய்ந்திருக்கலாமே. ஆறு மாதத்திற்குள் முடிவைக் காணலாம் என்று திகதியையும் நிர்ணயித்தல்லவா வலிந்து வலிந்து அழைத்துக் கொண்டிருந்தார்கள்!!

என்னமாய்ப் புச்சுத்துகிறார்கள் பாருங்கள்! "மக்களின் கருத்துக்களைப் பெற்று பலருடன் கலந்து பேசி ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற எங்களது முடிவை வெளியிடுவோம்" என்கிறார் மாவை.

எத்தனை மக்களைச் சந்திக்கப் போகிறார்? எத்தனை பேருடன் கலந்து பேசப்போகிறார்? மக்களது முடிவை அறிய கருத்துக் கணிப்புத் தேர்தல் ஒன்றை தனியாக நடத்தப் போகிறாரா?

தீர்வை எடுத்துத் தாருங்கள் என்று மக்கள் உங்களைத் தெரிவு செய்து அனுப்பினால், நீங்களோ, யாரை ஆதரித்தால் தீர்வு வரும் என்று மக்களிடம் கேட்டுத்தான் முடிவு செய்வோம் என்று சடைகிறீர்கள்... ஐயா தாங்கேலுதில்லை... என்னவொரு உலகமகா சுத்து!... தூ!

தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்று அவர்களது ஆணையைப் பெற்று வைத்திருப்பவர்கள் நீங்கள். மிகப் பெரும்பான்மையாக வாக்குகளை அளித்து, அதிகாரத்தை உங்களுக்கே தந்துகொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள்.

அதை வைத்துக்கொண்டு எதையும் சாதிக்க வக்கில்லை. மத்தியில் ஆட்சிக்கு வருபவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள்மீது குற்றப்பட்டியல்களைத் திருப்பி விட்டபடியே நீங்கள் தப்பிக் கொண்டிருக்கிறீர்கள்.

- ஆசிரியர்

# பொது எதிரணிக்குள் குத்துவெட்டு

# சஜித் - சந்திரிக்கா முறுகல் உச்சம்

## அமைச்சர் விமல் தகவல்

பொது எதிரணிக்குள் சஜித்பிரேமதாசவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஓரம்கட்டி ஒதுக்கிவைக்க முயற்சித்து வருவதாகவும், தேர்தலுக்கு முன்னரே பொது எதிரணிக்குள் பிளவு ஏற்பட்டு விடும் சூழல் தோன்றியிருப்பதாகவும் அமைச்சர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

எதிரணியில் கட் அவுட்டுகள் அடிப்பதற்கு ஆட்கள் இல்லை. தமது இயலாமையை காட்டி கொள்ளாமல் இருப்பதற்கே எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் ஒருவேளை மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று விட்டால் யாருக்கு அதிகாரம் என்பதில் குழப்பநிலை ஏற்படும். ஒரு கடையில் மூன்று முதலாளிகள் இருக்க முடியுமா? அது போன்று தான் இவர்கள் அமைக்கும் ஆட்சியும் இருக்கப் போகின்றது.

கடைக்கு உரிமையாளராக மைத்திரிபால சிறிசேன இருந்தால் முதலாளிகளாக சந்திரக்காவும், ரணிலும் இருப்பார்கள். எவ்வாறாயினும் கடையின் பணம் வாங்கும் இடத்தில் சந்திரிக்கா இருப்பார். ஆனால் இந்தக்கடையால் பொது மக்களே தீர்மானம் எடுக்க முடியாமல் திண்டாடப் போகின்றனர்.

சஜித் பிரேமதாசவை சந்திரிக்கா திட்டமிட்ட வகையில் ஓரங்கட்டி வருகின்றார். அவர்கள் அரசியல் பயணம் ஆரம்பமாகி இரு வாரங்கள் முடியவில்லை. அதற்குள் ஓரங்கட்டல்கள் இடம்பெற்று வருகினறன. மேலும் சந்திரிக்கா தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ரணில் விக்கிரம சிங்கவை பகடைக்காயாக வைத்துள்ளார். பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரம சிங்க மற்றும் ஹெல உறுமய ஆகியோருடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டனர். ஹெல உறுமயவுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிககையில் ஒற்றை ஆட்சி குறித்து பேசப்பட்டுள்ளது. இதில் ஹெல உறுமய 100 நாட்களுக்கு மாத்திரம் தான் பொறுப்புக் கூறுமாம்.

இந்நிலையில் மைத்திரிபால சிறிசேன கட்டாயம் ரணில் விக்கிரம சிங்கவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்திருக்க வேண்டும். அவ்வாறு உடன்படிக்கை ஒன்றை செய்யாமல் ரணில் விக்கிரம சிங்க தனது கட்சியின் வாக்குகளை மைத்திரிபால சிறிசேனவுக்கு பெற்றுகொடுக்க நடவடிக்கை எடுத்திருக்க மாட்டார். எனவே மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை தொடர்பில் மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது தோல்வியுற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா பொதுமக்களை வைத்துக்கொண்டு பொய் பிரசாரங்களை மேற்கொண்டார். ஆனால் தற்போது மைத்திரிபால சிறிசேன ஊடகங்களை வைத்துக்கொண்டு அழுது கொண்டும், பொய் பிரசாரங்களை மேற்கொண்டும் இருக்கின்றார்.

நாட்டை இரண்டாக பிளவுபடுத்த ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டார். சுனாமியை சாதகமாக வைத்து சந்திரிக்கா புலிகளுக்கு நிவாரணங்களையும், பல உதவிகளையும் வழங்கினார். இந்நிலையில் மீண்டும் நாட்டை பாதாளத்தில் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றனர். எனவே மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க மற்றும் சந்திரிக்கா ஆகியோரின் கூட்டு தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்என்றும் அவர் தெரிவித்தார்.

## பிரசார ஊர்வலங்கள் அனைத்தும் முற்றாகத் தடை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யும் தினமான நாளை யிலிருந்து எந்தவொரு வேட்பாளரையும் ஆதரித்து ஊர்வலங்கள் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் அறிவிததுள்ளது.

இந்த தடையுத்தரவு *2015* ஜனவரி *8* ஆம் திகதியிலிருந்து ஒரு வாரம் முடியும் வரையில் அமுலில் இருக்கும். ஜனாதிபதியும் போஸ்டர், கட்அவுட் என்பனவற்றை பொது இடங்களில் காட்சிப்படுத்தவும் முடியாது. அவ்வாறு செய்வது தேர்தல் சட்டத்துக்கு முரணானது எனவும் தேர்தல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மைத்திரியின் சட்ட ஆலோசகராக ஷிராணி பண்டாரநாயக்கா

பொது எதிரணிவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கான சட்ட ஆலோசகராக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா செயறபடவுள்ளார். முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தல் காலத்தில் முகம்கொடுக்கும் சட்ட ரீதியான அனைத்து பிரச்சினைகளுக்கும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சட்ட ஆலோசனை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

என்றாலும் அவர் தேர்தல் மேடைகளில் தோன்றுவது தொடர்பில் இதுவரை எந்தவிதத் தீர்மானமும் எடுக்கவில்லை என்றும் அரசியல் வட்டாரங்களை ஆதாரம்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

## உதவித்தேர்தல்கள் ஆணையாளர்கள் அவசரமாக கொழும்புக்கு அழைப்பு

### இன்று தேர்தல்கள் செயலகத்தில் மாநாடு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்கான மாநாடொன்று இன்று தேர்தல் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் தேர்தல் திணைக்களத்தின் அனைத்து நிலை ஊழியர்களும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடமாகாணத்தின் வவுனியா- மன்னார்- முல்லைத்தீவு- கிளிநொச்சி- யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களுக்கு எதிர்வரும் 10ஆம் திகதி விசேட மாநாடொன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் காங்கிரஸ் அரசு பக்கம் சாய்ந்தாலும் முஸ்லிம்களின் ஆதரவு மைத்திரிக்கே

### பியகம பிரதேசசபை உறுப்பினர் தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளுங்கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தாலும் முஸ்லிம் காங்கிரஸிற்கு வாக்களிக்கும் எமது முஸ்லிம் சகோதர, சகோதரிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்காது பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கே வாக்களிப்பர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பியகம பிரதேச சபை உறுப்பினர் மொஹமட் இர்பான் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து செய்தியாளர்கள் அவரிடம் வினவிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட முஸ்லிம் கிராமங்களுக்கு இந்த அரசாங்கம் எந்த விதமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் செய்யவில்லை.

பொது பல சேனாவை இணைத்துக் கொண்டு எமக்கெதிராக இனவாத அரசியலையே செய்கிறது. இம்முறை வாக்குச் சாவடிக்குச் செல்லும் ஒவ்வொரு முஸ்லிமும் அளுத்கம சம்பவத்தை ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்து தமது வாக்கை வழங்க வேண்டும் எனவும்,

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டினால் ஏகாதிபத்திய அரசியல் முறை ஒழிக்கப்பட்டு ஒரு சுதந்திரமான அரசியல் சூழல் உருவாகும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



**தங்கள் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே முதலாவது நடவடிக்கையாக இருக்கும் என்று மனோ கனேசன் சொல்கிறார். என்ன தீர்வு என்று சொல்லவில்லை. பொது எதிரணியிடம் தீர்வு இருந்தால் தானே சொல்வதற்கு. இதை அவர் சொல்லக்கூடாது. எதிரணித் தலைவர்கள் சொல்ல வேண்டும். மைத்திரிபால சிறிசேன சொல்ல வேண்டும். ரணில் விக்கிரமசிங்க சொல்ல வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கப்போவதாகக் கூறி இரண்டு தடவைகள் பதவி வகித்தபோதிலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாத சந்திரிகா சொல்ல வேண்டும்.**

# மக்களை முன்னிலைப்படுத்தாத கூட்டமைப்பின் முடிவு

**சங்கர சிவன்**

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதையிட்டு இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று சொல்கிறார் சம்பந்தன். ஆனால், மாவை சேனாதிராசாவும் சுமந்திரனும் சம்பந்தனின் கூற்றைப் பொய்யாக்கிவிட்டனர். சிங்கள முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து மகிந்தவை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று மாவை சேனாதிராசா அண்மையில் கூறி-னார். முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என்கிறார் சுமந்திரன். எதிரணியின் பொது வேட்பாளரை ஆதரிப்பது தான் தங்கள் நிலைப்பாடு என்பதையே இவர்கள் வெளிப் படுத்தியிருக்கின்றார்கள். அப்படியானால் இன்னும் முடிவு செய்யவில்லை என்று ஒழிவு-மறைவு எதற்காக? தேர்தல் பிரசார செலவுக்காகப் பொது எதிரணியுடன் சம்பந்தன் பேரம் பேசுவதாக இரு இணையத்தளம் அண்மையில் செய்தி வெளியிட் டிருந்தது. அதற்காகத் தான் இந்த ஒழிவு மறைவா?

கூட்டமைப்பு எப்போதும் மக்களை முன்னிலைப்படுதி முடிவுகளை எடுப்பதில்லை. தங்கள் வர்க்க சார்பு நிலைக்கு அமைவான முடிவுகளையே எப்போதும் எடுப்பார்கள். இவர்களைத் தெரிவு செய்யும் பெரும்பாலான மக்கள் இவர்களின் வர்க்க சார்பு நிலைப்பாட்டில் இல்லை யென்பதால், தங்களுக்குச் சாதகமான முடிவுகளை எடுத்து விட்டு மக்களைத் திருப்திப்படுத்து வதற்காகச் சில காரணங்களைக் கண்டுபிடித்துச் சொல்வார்கள். மகிந்தவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற் குக் கைகொடுக்க வேண்டும் என்பதும் கூட்டமைப்பு இப்போது எடுத்திருக்கும் முடிவு. இந்த இரண்டையும் செய்து முடித்தால் தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா? இதற்கு ஏதாவது காரணம் கண்டுபிடித்துச் சொல்லத்தான் போகின்றார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

கூட்டமைப்புத் தலைவர்கள் எப்போதும் தங்கள் வர்க்கத்தின் நலனை முன்னிலைப்படுத்தியே தீர்மானங்களை எடுப்பார்கள். ஐக்கிய தேசியக் கட்சி எந்தப் பக்கமோ அந்தப் பக்கம் தான் கூட்டமைப்புத் தலைமை என்பது நாடறிந்த கதை. தங்கள் முடிவுகளின் உண்மைக் காரணத்தைச் சொல்லிவிட்டுப் போகாமல் முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து செயற்படுவதாகக் கூறி எல்லோரையும் பேய்க்காட்டப் பார்க்கின்றார்கள். யார் இவர்களின் முற்போக்கு சக்திகள்? பொது வேட் பாளருக்குப் பின்னாலுள்ள பிரதான சக்திகள் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜாதிக ஹெல உறுமயவும். கடைந் தெடுத்த பிற்போக்கு சக்திகளாகவும் பேரினவாதிகளாகவும் உள்ள இவர்களையே மாவையும் சுமந்திரனும் முற்போக்கு சக்திகள் என்கிறார்களா? பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதில்லை என்றும் அதில் மேலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் கூறியவர் ரணில் விக்கிரமசிங்க. பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தவர் சம்பிக்க ரணவக்க. பொது வேட்பாளர் வெற்றி பெற்றால் நல்லிணக்க ஆணைக்குழு வின் சிபார்சுகளை நடைமுறைப்படுத் தக்கூடாது என்று இவர் இப்போதே சொல்லத் தொடங்கிவிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியையும் ஹெல உறு மயவையும் தவிர நவசிஹல உருமய போன்ற சிறிய பேரினவாதக் கட்சிகளும் சரத் பொன்சேகாவின் கட்சியும் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றன. இந்தக் கட்சிகளையும் முற்போக்கு சக்திகள் என்று கூட்டமைப்பு சொல்கின்றதா?

வழமை போல இவர்கள் தங்கள் வர்க்க சார்பு நிலைக்கேற்ற தீர்மானத்தை எடுக்கலாம். ஆனால், முற்போக்கு என்ற பதத்தைக் கொச்சைப்படுத்தக் கூடாது. மக்களின் வாழ்க்கை நிலையிலிருந்து மேல் நோக்கிய நகர்வு முற்போக்கு என்றால் தமிழ்ப் பகுதிகளில் இடம்பெற்ற வீதி அபி விருத்தி, பாடசாலை அபிவிருத்தி, வீடு இல்லாதவர்களுக்கு வீடு, காணி இல்லாதவர்களுக்குக் காணி, பல் கலைக்கழகத்துக்குப் பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் எல்லாமே முற்போக்கு நடவடிக்கைகள் தான். இவற்றைக் கொச்சைத்தனமாக விமர் சனம் செய்தவர்கள் முற்போக்கு பற்றிப் பேசலாமா?

தமிழ்த் தலைவர்கள் எந்தக் காலத்திலும் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டதாக வரலாறு இல்லை. இவர்களின் இடதுசாரி எதிர்ப்பு மனோ பாவம் காரணமாக எப்போதும் பிற்போக்கின் செல்லப்பிள்ளைகளாகவே செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். இதனால், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றி இத்தலைவர்கள் கொஞ்சங்கூடக் கவலைப்பட்டதில்லை.

இடதுசாரி எதிர்ப்புக் காரணமாகத் தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினைக் கான தீர்வை இரண்டு சந்தர்ப்பங்களில் கோட்டைவிட்டார்கள். 1965 பொதுத் தேர்தலுக்குப் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைப்பதற்குத் தமிழரசுக் கட்சியின் ஆதரவைக் கோரியது. பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளித்தது. அந்த அழைப் பைத் தமிழரசுக் கட்சி ஏற்றிருந்தால் அமையும் அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி தீர்மான சக்தியாக இருந்திருக்கும். தமிழரசுக் கட்சியின் ஆதரவு இல்லா

**மகிந்தவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற்குக் கைகொடுக்க வேண்டும் என்பதும் கூட்டமைப்பு இப்போது எடுத்திருக்கும் முடிவு. இந்த இரண்டையும் செய்து முடித்தால் தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா? இதற்கு ஏதாவது காரணம் கண்டுபிடித்துச் சொல்லத்தான் போகின்றார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.**

விட்டால் அரசாங்கம் கவிழும் நிலை. இந்த நிலையைப் பயன்படுத்தி பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கலாம். அந்த அரசாங்கத்தில் இடதுசாரிகளும் அமைச்சர்களாக இருப்பார்கள் என்பதால் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் நலனை முன் னிலைப்படுத்தாமல் வர்க்க நலனுக்கு முன்னுரிமை அளித்து மாவட்ட சபைக் காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதர வளித்தது. இறுதியில் மாவட்ட சபையும் கிடைக்கவில்லை.

முதலாவது குடியரசு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்ட வேளையில் இரண் டாவது சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த அரசியலமைப்பின் உருவாக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினால் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களை அரிசயலமைப்பில் உள்ளடக்குவதாகத் திருச்செல்வத்துக்கூடாக எஸ்.ஜே.வீ. செல்வநாயகத்துக்குத் தகவல் அனுப்பப்பட்டது. அந்த அரசாங்கத்திலும்



இடதுசாரி அமைச்சர்கள் உள்ளனர் என்பதற்காகத் தமிழரசுக் கட்சி அந்த அழைப்பை நிராகரித்தது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் அணி சேர்ந்தது.

அது போலவே இப்போதும் தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத் தாமல் தங்கள் வர்க்க நலனுக்காக முடிவை எடுத்திருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பில் ஐந்து வருடங்களாக உறுப்புரிமை வகித்தவர்கள் வேறு எந்த முடிவைத் தான் எடுப்பார்கள்? இவர்கள் இப்போது எடுத்திருக்கும் முடிவு தமிழ் மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்த்து வைக்கும் என்று இவர்களால் கூறமுடியாது. தமிழ் மக்களின் பிரத்தியேகமான எந்தப் பிரச்சினைக்கும் பொது எதிரணி தீர்வை முன்வைக்கவில்லை. இந்த நிலையில் மக்களைத் திருப்திப்படுத்துவதற்கு எதுவும் கூற முடியாததால் முற்போக்கு சக்திகளுடன் கூட்டுச் சேர்வதாக கதை விடுகின்றார்கள்.

பொது எதிரணியின் வேலைத்திட்டத்தில் தீர்வு இல்லை என்பதை மனோ கணேசன் வெளிப்படுத்திவிட்டார். தங்கள் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே முதலாவது நடவடிக்கையாக இருக்கும் என்று அவர் சொல்கிறார். என்ன தீர்வு என்று சொல்லவில்லை. பொது எதிரணி யிடம் தீர்வு இருந்தால் தானே சொல் வதற்கு. இதை அவர் சொல்லக்கூடாது. எதிரணித் தலைவர்கள் சொல்ல வேண்டும். மைத்திரிபால சிறிசேன சொல்ல வேண்டும். ரணில் விக்கிரம சிங்க சொல்ல வேண்டும். நிறை வேற்று ஜனாதிபதி முறையை நீக்கப்போவதாகக் கூறி இரண்டு தடவைகள் பதவி வகித்தபோதிலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாத சந்திரிகா சொல்ல வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என் பது மனோ கணேசனுக்குத் தெரியாது. ஊடகவியலாளர் மகாநாடுகளில் ஐக்கிய தேசிய கட்சியின் ஊதுகுழலாக இனப் பிரச்சினை பற்றிப் பேசிவரும் மனோ கணேசன் எந்தச் சந்தர்ப்பத்திலாவது இனப்பிரச்சினைக்கு இது தான் தீர்வு என்று சொன்னது கிடையாது. கூட்டமைப்பிடமும் இனப்பிரச்சினைக் கான தீர்வு இல்லை. மனோ கணே சனிடமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு இல்லை. இவர்கள் கூட்டுச் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது ஆண்டிகள் மடங்கட்டிய கதைபோல ஆகிவிடும்.

# இலஞ்சம் கொடுக்க முயற்சித்தாரா சிசன்

## அடியோடு மறுக்கிறது அமெரிக்க தூதரகம்



இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜெ.சிசன், தனக்கு லஞ்சம் வழங்க முன்வந்தார் என்று இலங்கை அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

ஐ.நா. பதவியை ஏற்பதற்காக இலங்கையில் தனது பணிகளை முடித்துக் கொண்டு புறப்பட்டுள்ள முன்னாள் தூதுவர் மீதான இந்தக் குற்றச்சாட்டு ஆதார மற்றது என அமெரிக்கத் தூதரகம் தெரிவித் துள்ளது. மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத் திருந்தார். முன்னாள் தூதுவர் தனக்கு லஞ்சம் வழங்க முன் வந்தார் என்றும், அது பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், அமைச்சின் செயலாளரும் அவ்வேளை அங்கிருந்தார் எனவும் அவர் குறிப் பிட்டிருந்தார். வெளிநாட்டு தூதுவர்கள் எப்படி அமைச்சர்களுக்கு வலைவீசுகின்றனர் என்பதை, தான் இந்த அனுபவத்தின் மூலமாக உணர்ந்துகொண்டார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அமெரிக்க தூதரகம், மூத்த அரச அதிகாரிகளுடனான எமது செயற்பாடுகள், இலங்கை குறித்த அமெரிக்காவின் கொள்கை மற்றும் அமெரிக்க அரச மற்றும் பொருளாதர நடைமுறைகள் குறித்த அடிப்படை புரிந்துணர்வின்மையை இது புலப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# பொது எதிரணியில் முரண்பாடுகள் உச்சம்

## அமைச்சர் யாப்பா சொல்கிறார்



"எதிரணியில் அங்கம் வகிக்கின்ற தரப்புக்கள் மத்தியில் தற்போது பாரிய முரண்பாடுகள் தோன்றியுள்ளன. ஒவ்வொருவரும் வித்தியாசமான கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

எதிரணியினர் தமக்குள்ள கடும் முரண்பாடுகளைத் தோற்றுவித்துக்கொண்டுள்ளனர். அவர்கள் கூட்டு முரண்பாடுகளினால் நிறைந்துபோயுள்ளனர். இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசில் அமைச்சர்கள் என்ற வகையில் எங்களுக்கு எவ்விதமான அழுத்தங்களும் இல்லை.

அமைச்சர்கள் அரசின் கொள்கைகளுக்கு அமைவாக செயற்படவேண்டும். அவ்வாறு செயற்படும்போது எவ்விதமான அழுத்தங்களும் வராது. அப்படி ஓர் அழுத்தமும் இதுவரை எவருக்கும் வந்ததில்லை. எமது கட்சி மிகவும் பலமாக உள்ள கட்சியாகும். இந்நிலையில், யாருக்கும் பயந்து கொண்டு நாங்கள் இருக்கவில்லை. யாருக்கு எதற்காக நாங்கள் பயப்படவேண்டும்? நாங்கள் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை" - என்று அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

### சவுதியில் மரண தண்டனைபெற்ற இலங்கையருக்கு மன்னிப்பு

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் சாரதியாக பணியாற்றி வந்த இந்த இலங்கை பிரஜைகளின் வாகனத்தில் விபத்துக்குள்ளாகி அந்நாட்டு பிரஜை ஒருவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. விபத்தில் உயிரிழந்தவரின் தந்தை இலங்கை பிரஜையிடம் இழப்பீட்டை பெற்று மன்னிப்பு வழங்கினார். இதனையடுத்து அவர் மரண தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

உயிரிழந்தவரின் தந்தைக்கு மூன்று இலட்சம் ரியால்களை இழப்பீடாக வழங்குமாறு இலங்கை பரஜைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# மைத்திரிக்காக சந்திரிக்காவின் மந்திராலோசனை



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க, வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.


நான்கு நாடுகளின் ராஜதந்திரிகளுடன் இவ்வாறு பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரின் சார்பிலேயே சந்திரிக்கா இவ்வாறு இராஜ தந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் சந்திரிக்கா பத்துக்கு மேற்பட்ட ராஜதந்திரிகளை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொது வேட்பாளரின் வெளி விவகார உறவுகள் தொடர் பிலான பொறுப்பு சந்திரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக உறுதிப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையிலேயே வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் சந்திரிக்கா தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறார்.

மைத்திரி வெற்றியீட்டினால் மேற்கொள்ளப்படவிருக்கும் வெளிவிவகாரக் கொள்கை மறு சீரமைப்புக்கள் குறித்தும் அவர் எடுத்துக்கூறி வருகிறார்.

# கைதிகள் பலருக்கு விடுதலை பாப்பரசரின் வருகையையொட்டி



பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு சிறைக்கைதிகள் சிலருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். நோய்வாய்ப்பட்டவர்கள், நல லொழுக்கமானவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆகிய அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளதாக இலங்கை சிறைச் சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொது மன் னிப்பு வழங்கப்பட வேண்டிய கைதிகளை தெரியும் நட வடிக்கை சிறைச்சாலை மற்றும் புனரவாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜ தீரவின் வழிகாட்டல்களுக்கு அமைய மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சின் செயலாளர் ஜீ.எஸ்.விதான கைதிகளின் பட்டியலை தயாரித்து ஜனாதி பதி மகிந்த ராஜபக்சவிடம் சமர்ப்பிக்க உள்ளார்.

இந்தப் பட்டியலுக்கு ஜனாதிபதியின் அனுமதி பெற்றுக் கொள்ளப் ப டவுள்ளது. பாப்பரசரை கௌரவப்படுத்தும் நோக் கில் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# மாலைதீவுக்கு செல்கிறது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

மாலைதீவில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினையை அடுத்து இலங்கையில் இருந்து தண்ணீர் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு அரசாங்கத்தின் கோரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியப் பெருங்கடலில் இருக்கும் தீவுத் தேசமான மாலைதீவுகளின் தலைநகரில் பாதுகாப்பான குடிநீர் தீர்ந்து போயுள்ளதையடுத்து அந்நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு வேகமாகக் குறைந்து வரும் புட்டிகளில் அடைக்கப்பட்ட குடிநீரை பெற்றுக் கொள்வதில் மக்களிடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. கடைகள் மீதும் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

தலைநகர் மாலேயிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, குடிநீர் வழங்கும் குழாய்கள் மூடப்பட்டுள்ளன.

அந்த சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் செயற்பட்டு மக்களுக்கான குடிநீர் விநியோகம் தொடங்க ஐந்து நாட்கள் ஆகும் என்று மாலைதீவின் அரசும் கூறுகிறது.

இந்நிலையில் மாலைதீவுக்கு குடிநீர் வழங்க இலங்கை தீர்மானித்துள்ளது. மேலும் இந்தியா உள்ளிட்ட நாடுகளும் குடிநீரை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் படை அதிகாரிகள் தேர்தல் பிரசாரக்களத்தில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தேர்தல்பிரசார நடவடிக்கைகளுக்காக ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகளை பயன்படுத்த பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். என்று தகவல்கள் கசிந்துள்ளன. மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் கொழும்பின் தேர்தல் அமைப்பாளர்கள் குழப்பநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், செயலற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை தொடர்ந்தே அவர் முன்னாள் இராணுவ அதிகாரிகளை பயன்படுத்த திட்டமிட்டுள்ளார்.

இதனடிப்படையில் கொழும்பு நான்கு வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் கொழும்பிற்கான பிரசார நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கே.பி எகோடவெல நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு அவரின் தலைமை ஒருங்கிணைப்பாளராக மேஜர் ஜெனரல் ஜெயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.



கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சரஸ்வதி கலையரங்கில் நடைபெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வினையும், சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தர் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும், முன்பள்ளி ஆசிரியர் உரையாற்றுவதனையும் காணலாம். (51)

# ஆலய பரிபாலனசபை தெரிவு

(வடமராட்சி)

பொலிகண்டி தெற்கு திலயம்பற்றை அருள்மிகு வீரபத்திரர் ஆலய வருடாந்த பொதுக்கூட்டமும் நீர்வாகத்தெரிவும் அண்மையில் சி.உதயச்சந்திரன் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. தலைவராக த.கங்காபதி, உபதலைவராக கி.இராசேந்திரம், செயலாளராக க.தவச்செல்வம், உபசெயலாளராக தே.செல்வராசா, பொருளாளராக செ.செல்வராஜன் ஆகியோருடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக 14 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (116)

# 'நாம் நண்பர்கள்' அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கல்வியின் வறுமையினை ஒழிப்போம் என்ற தொனிபபொருளின் கீழ் நடைபெற்று வரும் பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வின் ஒரு கட்டமாக கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் தெரிவு செய்யப்பட்ட 75 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பிரான்ஸ்ஸை வசிப்பிடமாக கொண்ட பரராஜசிங்கம் யசோகுமார் தனது 54 ஆவது பிறந்ததினத்தை கொண்டாடவுள்ள நிலையிலேயே அதற்கான செலவுகளை நிறுத்தி இக் கற்றல் உபகரணங்களை கையளிப்பதற்கு அனுசரணை வழங்கியுள்ளார்.

இந் நிகழ்வில் நாம் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலை அதிபர் கணேஷன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (48)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசரகால உதவிகள் வழங்கப்பட்டன

## யாழ்.அரசஅதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த அடை மழையால் வெள்ள பாதிப்புக்களுக்குள்ளான மக்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்க வைகககப்பட்ட மக்களிற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அனர்த்த மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்தினால் அவசரகால உதவிகள் வழங்கப்பட்டதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் மற்றும் தறப்பாள், பாய், பால் மா வகைகள், போர்வைகள் ஆகியன அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அனர்த்த மத்திய நிலையத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டதுடன் வெள்ள அனர்த்தத்தினால பாதிக்கப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் ஒருவார காலத்திற்கு வழங்கப்பட்டன இதேபோல் பௌதீக ரீதியான அனர்த்த தணிப்பு செயற்பாடுகள் அனர்த்த மத்திய நிலையத்தினால் இராணுவத்தினரின் உதவியுடன் ஒவ்வொரு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தொடர்ச்சியான நிவாரண பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு நிலைமைகளுக்கு ஏற்றாவாறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க யாழ்.மாவட்ட செயலகம் தயாராகவுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த அவசர நிவாரண சேவையில் உணவு அல்லாத நிவாரண சேவைகள் மற்றும் பொருட்களில UNHCR FRIENDS, SOS, SEWALANKA WORLD VISION மற்றும் சாந்திகம் ஆகிய நிறுவனங்களும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளன எனவும் இதேபோல் ஏனைய நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளும் இதுபோன்ற அவசரகால உதவிகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# காலாவதியான பொருட்களை விற்ற 12 வர்த்தகர்களுக்கு அபராதம்

வடமராட்சி பகுதியிலுள்ள 12 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தால் 66 ஆயிரம் ரூபா தண்டம் விதிககப்பட்டுள்ளதாக யாழ்.பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பொறுப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்தார்.

அண்மையில், அதிகார சபை அதிகாரிகளால், பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களின் விலையை காட்சிப்படுத்தாமை மற்றும் அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களை செய்த 12 வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து, அவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு, நேற்று முன்தினம விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து, நீதவான் ஜே.கஜ்நிதிபாலன் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# பட்டம் ஏற்றும் செயற்பாடு விசனமடையும் விவசாயிகள்

(கரணவாய்)

வடமராட்சி வல்லைப்பகுதியில் உள்ள வெளிப் பிரதேசங்களில் குறிப்பாக வயற்பகுதிகளில் நின்று இளைஞர்கள் பட்டம் ஏற்றுவதால் தமது வயல்களிலுள்ள நெற்பயிர்கள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கூட்டமாக இளைஞர்கள் வயல்களுக்குள் சென்று பட்டம் ஏற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் இதனால் வயல்களில் வளர்ந்துள்ள நெற்பயிர்கள் மிதிபட்டு அழிவடைவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

பெருந்தொகை பணத்தை செலவு செய்து நெற்செய்கை மேற்கொண்ட நிலையில் தற்போது பெய்துள்ள மழை ஓரளவு ஆறுதலை ஏற்படுத்தியுள்ள நிலையில் இளைஞர்களின் இத்தகைய செயற்பாடுகள் தம்மை நஷ்டத்தை எதிர்கொள்ள வைப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (18)

# முரசின் இன்றைய பலன்

(07.12.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி.

பிரதமை / சித்தம்.

மிருகசீரிட நட்சத்திரம் பின்னிரவு 11.10 வரை. பின் திருவாதிரை.

இராகு காலம 04.47 - 06.17 வரை. சுபநேரம 09.17 - 10.47 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
விழாக்களில் தம்பதியர் சகிதம் கலந்து சிறப்பித்தல், வெளியூர் மணமகனை தேடல்.

**ரிஷபம்**
முரண்பாடு ஏற்படாது விடல், குறுக்கே நின்றவர்கள் விலகிவிடல்.

**மிதுனம்**
பரிசில், கௌரவம் கிடைத்தல், தற்காலிக பணி நிரந்தரமாக்கும் செய்தியறிந்து மகிழ்வுறல்.

**கடகம்**
ஒத்துழைப்பு பாதகமாக இருத்தல், விவாகம் நிறைவேறத்தடை.

**சிம்மம்**
புதிய நபர்களால் ஆபத்து, மனக்கவலை ஏற்படல்.

**கன்னி**
எதிர்பாராத விபத்து ஏற்படல், வெளியூர் பயண முயற்சிக்கு ஆயத்தமாதல்.

**துலாம்**
மருத்துவபரிசோதனை சாதகமாதல், பிள்ளைகளின் செயற்பாட்டால் மனவேதனை ஏற்படல்.

**விருச்சிகம்**
தொழிலுக்காக புதிய நடைமுறையைப் பின்பற்றல், பெற்றோரின் தேகநிலையில் முன்னேற்றம் ஏற்படல்.

**தனுசு**
வெளியூர் செல்வதைக் கைவிடல், கடமையைப் பிரச்சினையின்றி செய்தல்.

**மகரம்**
உறவினர்கள் வருகை, வாக்குவாதம் ஏற்படும்.

**கும்பம்**
குடும்பத்தில் கவின் நிலை ஏற்படல், அவதானம் அவசியம்.

**மீனம்**
திடீர் பயணம் ஏற்படலாம், உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல்.






அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதிஒதுக்கீட்டில் பிரதேச மக்களின் பங்களிப்புடன் நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஈ.பி.டி.பி.யின் யாழ்ப்பாணம் தொகுதி தலைவர் த.றஜீவ் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்துள்ளார். நீண்ட காலமாக விளையாட்டு மைதானம் இல்லாததனால் போதிய பயிற்சி எடுக்க முடியாது இருந்தது எனவும் இதனை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததனை தொடர்ந்து புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

விளையாட்டுச் செய்திகள்

# தேசிய மட்ட சமபோஷா கால்பந்தாட்டம் மகாஜனக் கல்லூரி மூன்றாமிடம்



(களுத்துறை)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சமபோஷா வெற்றிக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் அகில இலங்கை பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கிடையில் நடாத்திய தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் களுத்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெண்கள் பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் மாதம்பை புனித சென்.சேவியர் கல்லூரி அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மகாஜனக் கல்லூரி அணி கோல் மழை பொழிந்து அசத்தியவண்ணமிருந்தது. குறிப்பாக, டிலக்ஷி, கௌரி, தர்மி, சரண்யா ஆகியோர் கோல் அடித்து மகாஜனக் கல்லூரியின் ஆதிக்கத்திற்கு வலுச்சேர்ந்தனர். பதில் கோல் அடிக்கும் முனைப்புடன் செயற்பட்ட புனித சென். சேவியர் கல்லூரி அணியின் முயற்சிகள் அனைத்தும் மகாஜனக் கல்லூரி வீராங்கனைகளால் முறியடிக்கப்பட்டது. நிறைவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டியில் மூன்று கோல்களை அடித்த டிலக்ஷி அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

இதேவேளை, தேசிய மட்டப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்ட மகாஜனக் கல்லூரி வீராங்கனைகளுக்கு நேற்று பாடசாலைச் சமூகத்தினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் ம. மணிசேகரம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு வீராங்கனைகளுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். (93)

## ஏழாவது களத்திற்கு ஓய்வு

(சிட்னி)

அவுஸ்ரேலிய இளம் வீரர் ஹியூக்ஸ் பந்து தாக்கி சுருண்டு விழுந்த சிட்னி மைதானத்தின் ஏழாவது ஆடுகளத்திற்கு (பிட்ச்) ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் இந்த ஆடுகளத்தைப் பயன்படுத்துவது இல்லை என்று சிட்னி கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து சிட்னி ஆடுகளப் பராமரிப்பாளர் டொம் பார்க்கர் கூறுகையில், சிட்னி மைதானத்தில் மொத்தம் 10 ஆடுகளங்கள் உள்ளன. இவற்றில் ஏழாவது ஆடுகளத்தில் துயர சம்பவம் நடந்தது. அந்த ஆடுகளத்தில் விளையாட எந்த வீரரும் முன் வரமாட்டார்கள்.

அனைவரின் மனதிலும் இன்னும் துயரம் குடி கொண்டுள்ளது. எந்தவொரு வீரரும் மரணம் அடைவதை நான் விரும்பவில்லை. நான் தயாரித்த ஆடுகளத்தில் யாரும் ரத்தத்தை சிந்த நான் விரும்பமாட்டேன். நடந்த சம்பவம் அனைவரையும் அதிர வைத்துள்ளது.

இந்த நினைவு அவ்வளவு விரைவில் எமது மனதை விட்டு நீங்கி விடாது. மைதான ஊழியர்கள் இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. எனவே தான் இந்த பிட்ச்சை மீண்டும் பயன்படுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம் என்றார்.

## மனப்போராட்டத்தில் ஆஸி.



(அடிலெய்ட்)

பிலிப் ஹியுசின் மரணத்திற்கு பின் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் நடைபெறவுள்ளது. இதில், அவுஸ்ரேலிய அணியினர் மிகப்பெரிய மனப்போராட்டத்தை எதிர் கொள்வர் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

பிலிப் ஹியுசின் மரணத்திற்கு பின் முதல் டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. சோகத்திலிருந்து மீண்டு இம்மாதிரியான சூழ்நிலையை எப்படி கையாள வேண்டும் என எந்தவொரு வீருருக்கும் தெரியாது. இதனால் எங்கள் அணி வீரர்கள் மிகப்பெரிய மனப்போராட்டத்தை எதிர் கொள்ளவுள்ளனர். இருப்பினும், இதிலிருந்து விடுபட்டு சிறப்பாக செயற்படுவர் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நியூசிலாந்து பதிலடி; ருவென்ரி–20 தொடர் சமநிலை

(டுபாய்)

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் நியூசிலாந்து அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் சமநிலையில் நிறைவடைந்தது.

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய நியூசிலாந்து அணி கப்டன் வில்லியம்ஸின் மற்றும் ராஞ்சி ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 32, ராஞ்சி 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமர் குல், அப்ரிடி ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 18.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் அகமட் ஷேஹ்ஸாட் 33, அப்ரிடி 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மில்ஸ், நீசம் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்திருந்தமையால் தொடர் சமநிலையில் நிறைவடைந்தது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## வருத்தப்படாத சகீர்

உலக கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் உத்தேச அணியில் இடம் பெறாதது தனக்கு அதிர்ச்சி அளிக்கவில்லை என இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, சம்பியன் லீக் ருவென்ரி-20 போட்டியில் (ஒக்ரோபர்) விளையாடுவதை இலக்காக வைத்திருந்தேன். அது நடக்காதது எனக்கு அதிர்ச்சியை அளித்தது.

உலக கிண்ண உத்தேச அணியில் இடம்பெறாதது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. உலக கோப்பை போட்டி ஆரம்பமாக இன்னும் சில காலமே உள்ளது. நான் முழு உடல் தகுதியுடன் இல்லை. கழகங்களுக்கிடையேயான ஆட்டம் அல்லது ரஞ்சி போட்டித் தொடர்களில் விளையாடுவதே எனது இலக்காக இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வாழ்வில் எதையும் சாதிக்க முடியும்

## துனுக்காய் பிரதேச செயலர் சி. குணபாலன் தெரிவிப்பு

இன்றைய காலத்தில் மாற்று வலுவுடையோர் பல சாதனை களை நிகழ்த்துகின்றனர். அவர் கள் இத்தகைய சாதனை களை நிகழ்த்துவதற்கு தன்னம் பிக்கை ஒன்றே காராணமாக அமைகிறது. அந்த வகையில் மாற்றுவலுவுடையோர் மட்டு மல்ல அனைவரும் தன்னம்பிக் கையுடன் செயற்பட்டால் எதை யும் சாதிக்கமுடியும் என துணுக காய் பிரதேச செயலர் சி.குண பாலன் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச செயல கத்தில் மாற்றுவலுவுடையோர் தினம் கடந்த வியாழக்கிழமை நடை பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு ஆற்றல் மறைக்கப்படு கின்ற போது இன்னொரு ஆற் றல் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே சிறப்பாற்றல் உடைய வர்கள் முடியும் என்ற தன்னம் பிக்கையுடன் உயர்நிலையை அடைய வேண்டும்.மேலும் மாற் றாற்றல் உடையவர்களை சமூ கம் மதிக்க வேண்டும். அவா களும் நல்ல நிலையை எட்டு வதற்கு வாய்ப்பை வழங்கவேண் டும்.

இன்று எத்தனையோ மாற் றாற்றல் உடைய மாணவர்கள் கல்வியில் ஏனைய இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் சாதனை படைக்கிறார்கள் இது அவர்களின் தன்னம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. எனவே மாற்றாற்றல் உடை யோர் சாதிப்பதற்கான சந்தர்ப் பத்தை நாங்கள் வழங்க தயா ராக உள்ளோம் சாதிப்பதற்கு தயாராகுங்கள் என்றார்.

இந்நிகழ்வில் பிரதித்திட்ட மடல் பணிப்பாளர் சாந்தி சிறஸ் கந்தராசா உரையாற்றியதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடை பெற்ற மாற்றுத்திறனாளிகளுக் கான அரச கலை இலக்கிய விழாவில் 1 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட துணுக்காய் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட மல்லாவி விசேட கல்விவள நிலையத்தில் கல்வி பயிலும் மாணவி செல்வி சனோஜிகா வுக்கு பிரதேச செயலாளரினால காசோலை வழங்கி கௌரவிக் கப்பட்டது (90)

# இந்து சமயப்பேரவையால் யோகா பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் புதிய யோகா பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிறு மாலை 4.30 மணிக்கு பேரவையின் செயலர் எஸ்.சக்திகிரீவன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'ஆரோக்கியத் திற்கான யோகா' என்னும் விடயம் பற்றி சுதேசவைத்தியர் க.சோதிதாசன் கருத்துரை வழங் குவார். யோகா பயிற்சிநெறி இருபிரிவுகளாக நடைபெறும் பயிற்சிநெறி - I மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும், பயிற்சிநெறி - II மாலை 6.00மணி தொடக்கம் 7.00 மணிவரையும் தொடர்ந்து 30 நாட்கள் தினமும் நடை பெறும். காலைநேர யோகா பயிற்சிக் கான பதிவுகளை இந்து சமயப் பேரவையின் தலைமை அலு வலகம் இலக்கம் 141 பலாலி வீதி கந்தர்மடம் எனும் முகவரி யில் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு ஒரே தடவையில் 10 மாதப்பணம்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் டிசம்பர் மாதம் 42 பேருக்கு பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கவுள்ளது. இதற்கென மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மேலதிகமாக 107 000 ரூபா நிதி ஒதுக்கீட்டை அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட பயனாளிகளுடன் சேர்த்து இவர்களுக் கும் 10 மாத பணம் ஒரே தடவையில் வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலரும் பிரதேச செயலக பிரிவின் சமூக சேவை கள் அலுவலரும் இணைந்து எடுத்த முயற்சியின் பயனாக இந்த நிதி வழங்கப்பட்டு உரியவர்களுக்கு தபாலகங்கள் ஊடாக வழங் கப்பட்டுள்ளன. அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப 250 ரூபா,300 ரூபா,350 ரூபா, 400 ரூபா, 450 ரூபா, 500 என இத் தொகை வழங் கப்பட்டு வருகிறது. 250 ரூபா பெறத் தகுதியானவருக்கு 2500 ரூபா போல ஏனைய தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது.(90)

# தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கலாசார விழாவும் நூல் வெளியீடும்

(வலிகாமம்)

வலி.வடக்கு தெல்லிப்பளை கலாசாரப் பேரவை நடாத்தும் கலா சார விழா - 2014 நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் வலி.வடக்கு தெல் லிப்பளை கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலாள ருமாகிய கனகராசா மோகன் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் சுப்பிர மணியம் முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சிரேஷ்ட சட் டத் தரணி கணபதிப்பிள்ளை சிவபாதம், வலி. வடக்கு தெல் லிப்பளை பிரதேச செயலக ஓய்வு நிலை நிர்வாக உத்தியோ கத்தர் சி. திருச்செந்திநாதன், தெல்லிப்பளை பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி ஐ.என்.எஸ். கஸ்தூரியாராச்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வரவேற்புரையினை வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக உதவி பிரதேச செய லாளர் உ. பிரபாகரமூர்த்தி, ஆசி யுரைகளினை மாவை ஆதீன பிரதம குரு மஹாராஜ ஸ்ரீ இரத் தினசபாபதிக்குருக்கள், குளமங் கால் பங்குத்தந்தை அருந்திரு றெக்ஸ் சவுந்தர அடிகளார், வாழ்த்துரையினை பருத்தித் துறை பிரதேச செயலாளர் த. ஜெயசீலன் ஆகியோர் வழங்க வுள்ளனர்.

கலை நிகழ்வுகளாக மருதப் புரவீகவல்லி நூல் வெளியீட்டு நிகழ்வும் 2014 ஆம் ஆண்டுக் கான கலைச்சுடர் விருது வழங் கும் நிகழ்வும் முதலமைச்சர் மற் றும் கலாபூசணம் விருது பெற்ற வர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இறுவட்டு வெளியீட்டு நிகழ் வும் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் கவியரங்க நிகழ் வில் காங்கேயன் மகளுக்கு கலி யாணம் சீர்கொண்டு வரு வாளோ யாழ்தேவி எனும் பொருளில் கவிஞர் ஜெயசீலன் குழுவினர் வழங்கவுள்ளார்கள்.

மாலைப் பொழுது பேச்சு நிகழ்வும் இலக்கிய விழா பரி சில்கள் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும நாடக ஆற்றுகை நிகழ் வும் இடம்பெறவுள்ளது. (63)



மானிப்பாய் இந்துக் கல்லூரி க.பொ.த சாதாரண தரம் 2003 மற்றும் உயர்தரம் 2006 கற்ற மாணவர்களால் நண்பர்கள் நட்புக்களின் தேடல் என்ற தொனிப்பொரு ளோடு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது செயற்றிட்டத்தின் கீழ் 70 மாணவர்களுக்கு காலணி,காலுறை என்பன அண்மையில் வழங்கப்பட்டன. (48)

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?



### கன்னி
### (உத்திரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)

**நேசிக்கும் மனப்பாங்குடைய கன்னி ராசிக்காரர்களே!**

காதலை மதிக்கும் நீங்கள், கனிந்த மனசுக்கு சொந்தக்காரர் கள். இதுவரை உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் பாதச் சனியாக அமர்ந்து உங்களை பல வகையிலும் சனிபகவான் கொடுமைப் படுத்தினாரே! பணப்பற்றாக்குறையையும், குடும்பத்தில் பிரச்சினைகளையும், உங்களை ஏடாகூடமாகவும் பேச வைத்த சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலகட்டங்களில் 3ஆம் வீட்டில் வலுவாக அமர்வ தால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேருவீர்கள். தோல்வி முகம் மாறும். இனி முதல் முயற்சியிலேயே எல்லாக் காரியங்களையும் முடித்துக் காட்டுவீர்கள்.

தொலைநோக்குச் சிந்தனையால் பழைய பிரச்சினை களுக்கு தீர்வு காண்பீர்கள். அறிவுபூர்வமாகவும், அனுபவ பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவருவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்கள் ஆலோசனைகளை எல்லோரும ஏற்றுக் கொள்வார்கள். தைரியமாகவும், தன்னிச்சையாகவும் செயற்படத் தொடங்குவீர்கள்.

**சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:**

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் சுக-சப்தமாதிபதி குருவின் சாரத்தில் விசாக நட்சத் திரம் 4ஆம் பாதம் 3ஆம் வீட்டில் சனி செல்வதால் தைரியம் கூடும். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனவருத்தம் நீங்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு பாதச் சனி யாக 2ஆம் வீடான துலாம் ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்காலகட்டத்தில் பேச்சால் பிரச்சினைகள் வரும். பணம் கொடுக்கல், வாங்கல் விடயத்தில் எச்சரிக்கையாக இருங்கள்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாக நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். பாதியில் நின்ற வேலைகளெல்லாம் விரைந்து முடியும். என்றாலும் பழைய கடனை நினைத்து அவ்வப்போது குழம்புவீர்கள்.

உங்கள் சுகாதிபதியும்-பூர்வ புண்யாதிபதியுமான சனிபக வான் தன் சுய நட்சத்திரமான அனுஷ நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக்காலக்கட்டத்தில் தாயாரின் உடல் நிலை சீராகும். தாய்வழி சொத்தை பெறுவதில் இருந்த தடைகள் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலைக்கு விண்ணப் பித்து காத்திருந்தவர்களுக்கு வேலை அமையும்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலகட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் தன்னைச் சுற்றியிருப்ப வர்களின் சுயரூபம் தெரிய வரும். ஒருபக்கம் பண வரவு உண்டு என்றாலும் செலவுகளும் இருக்கும்! மகளின் திருமண விடயத்தில் அவசரம் வேண்டாம். வரன் வீட்டாரைப் பற்றி விசாரித்து முடிப்பது நல்லது.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் ராசிநாதனும்-ஜீவனாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் பணப்புழக்கம் அதிகமாகும். சோர்வு, களைப்பு நீங்கி உற்சாகமடைவீர்கள். கௌரவ பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். சனிபகவான் ஐந்தாம் வீட்டை பார்ப்ப தால் பூர்வீக சொத்துப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். சனிபகவான் 9ஆம் வீட்டை பார்ப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். தந்தையாருக்கு முதுகுத் தண்டில் வலி, மூச்சுப் பிடிப்பு வந்து போகும். சனிபகவான் 12ஆம் வீட்டைப் பார்ப்ப தால் திடீர் பயணங்கள், வீண் அலைச்சல், கனவுத் தொல்லை, தூக்கமின்மை வந்து போகும்.

கன்னிப் பெண்கள் காதல் விவகாரத்தில் இருந்து வந்த பாதிப்புகள் நீங்கும். பெற்றோர் உங்களுடைய ஆசைகளை, எண்ணங்களை நிறைவேற்றி வைப்பார்கள். ஆடை, ஆபரணம் சேரும். திருமணம் விரைந்து முடியும். மாணவ-மாணவிகள் நினைவாற்றல் கூடும். படிப்பிலே முன்னேறுவீர்கள். விளை யாட்டுப் போட்டிகளிலும் பதக்கம் வெல்வீர்கள். வகுப்பாசிரியர் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

இந்த சனி மாற்றம் எல்லாவற்றையும் இழந்து தவித்துக் கொண்டிருந்த உங்களை ஆடம்பரமான வாழ்க்கைக்கு அழைத் துச் செல்லும்.


**பரிகாரம்!**

**கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். பாம்பு புற்றுள்ள கோவிலுக்குச் சென்று வரலாம். துர்க்கைக்கு நெய் தீபம் ஏற்றுங்கள். கிருஷ்ணரை வழிபடுவது மேன்மையளிக்கும். ராகு காலத்தில் வைரவருக்கு தயிர்ச்சாதம் படைத்து வழிபடலாம். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியை வணங்குங்கள்.**

(நாளை துலாம்)

# யாழ். புகையிரத நிலையத்தில்

## ஓவியம் வரையும் வெளிநாட்டுப் பெண்மணி





நாடளாவிய ரீதியில் சென்று தனது ஓவியப்பதிவுகளை தலை நகரின் முக்கிய இடங்களில் பதித்து வரும் வெளிநாட்டுப் பெண்மணி Painting Pirate (Rose Rovin) தற்போது யாழ். புகையிரத நிலையத்தில் தனது பதிவுகளை வரைந்து வருகின்றார்.

ஓவியமே தனது வாழ்வியல் என முடிவெடுத்து தொழிற் படுவதாக கூறும் இப் பெண்மணியை அவர் ஓவியம் தீட்டிக்கொண்டிருக்கும் போது யாழ் புகையிரத நிலையத்தில் சந்தித்தோம்.

**கேள்வி:-** உங்களது வருகை சுயவிருப்பின் பெயரில் இடம்பெற்றதா? அல்லது அழைப்பின் பெயரில் வந்தீர்களா?

**பதில்:-** அழைப்பின் பெயரில் தான் இங்கு வந்தேன். என்னைக் கவர்ந்த யாழ்ப்பாணத்திற்காக நான் இதை விருப்புடன் செய்து வருகின்றேன். இலவசமாகவே இதையெல்லாம் செய்கிறேன்.

**கேள்வி:-** நீங்கள் பிறந்த நாடு எது?

**பதில்:-** பிறந்த நாடு "வேல்ஸ்" வளர்ந்த நாடு "பிரான்ஸ்".

**கேள்வி :-** இவ்வாறான ஓர் நல்ல சிந்தனையில் உருவான இந்தப் பணியை இதுவரை எத்தனை நாடுகளில் செய்திருக்கிறீர்கள்?

**பதில்:-** இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா இன்னும் பல பல நாடுகளில் இச்செயற் பாட்டை முன் னெடுத்து வருகின்றேன். யாழ்ப்பாணத் தையும், யாழ்ப்பாண மக்களையும் பார்க்கும்போது மிகுந்த அழகாக எனக்குத் தென்படுகின்றது. என்னைப் பார்த்து சிரிக்கின்றார்கள். சிறுபிள்ளைகள் என்னோடு கதைக்க ஆசைப்படுகின்றார்கள். இருப்பினும் மொழி தடையாக இருக்கின்றது.

**கேள்வி:-** இங்குள்ள ஓவியக் கலைஞர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்ததா?

**பதில்:-** இதுவரை அது கிடைக்க வில்லை. ஆனால் கொழும்பில் கிடைத்தது. இங்குள்ளவர்களை சந்திக்க நான் ஆவலாக உள்ளேன். காரணம் என் கலை கற்பனைகளையும் அவர்களின் கலை கற்பனைகளையும் நாம் பரிமாறிக்கொள்வதால் இருவரின் கலை ஆர்வமும் செப்பனிடப்படும்.

**கேள்வி:-** நீங்கள் எந்தக் காலப்பகுதி வரை யாழ்ப்பாணத்தில் நின்று இந்தப் பணியைத் தொடர்வீர்கள்.

**பதில்:-** 23.12.2014 வரை இங்கு நிற்பேன். இதனைவிட பழைய பூங்காவில் நடைபாதை வழிகாட்டி ஒன்றை வெற்றுப் போத்தல்களைப் பயன்படுத்தி செய்ய தீர்மானித்துள்ளேன். இதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக் காண்டிருக்கின்றன. எனது இந்த கலை நுணுக்கங் களை பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள ஆளணிகளின் மத்தியில் பகிர்ந்துகொள்வது பயனுடையதாக மட்டுமல்ல எனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென விரும்பப்படுகிறேன். யாழ்ப்பாணத்தில் என் வேலைகள் முடிந்ததும் கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கு சென்று இவ்வாறான ஓவியங்களை வரைய உள்ளேன் கொழும்பு பொது வைத்தியசாலையிலும் இவ்வாறான ஓவியங்களை வரையவுள்ளேன்.

# வேலணையூர் தாஸின்

# மழைக்காலக் குறிப்புகள்

**- கருணாகரன் -**

வேலணையூர் தாஸின் நூல் வெளியீட்டுக்கு பல தரப்பினரும் இந்த அரங்கில் கூடியிருக்கிறார்கள். தாஸின் இந்தக் கவிதை நூலுக்கு நிலாந்தன் முன்னுரையில் குறிப்பிட்டதைப்போல எல்லாக்கரைகளையும் தழுவி யோடும் நதியாகத் தாஸ் இருப்பதால் வெளியீட்டுக்குப் பலரும் வருகை தந்திருக்கின்றனர். இது எப்படிச் சாத்தியமானது என்பதையே இங்கே பார்க்க விரும்புகிறேன்.

தாஸ் ஒரு இலக்கியச் செயற்பாட்டாளர். எல்லோருக்குமான பொதுவெளியில் இயங்குவதும் எல்லோருக்குமான பொது வெளியைத் தன்னுள் கொண்டிருப்பதுமே ஒரு செயற்பாட்டாளருக்குரிய அடிப்படைப் பண்பாகும். தாஸிடம் இந்தப் பண்புள்ளது. நிச்சயமாக தாஸ் ஒரு ஜனநாயகவாதி. ஜனநாயக வாதியாக இருப்பதன் மூலமே தாஸ் பொதுவெளியில் எந்தக் கூச்சமும் இல்லாமல் எல்லாத் தரப்பினரோடும் ஒளிவுமறைவின்றி, சாய்வுகளின்றி, நிலைமைக்குத் தோதாக அப்படியும் இப்படியும் தளம்பாமல், சமரசமின்றி பகிரங்கமாக ஊடாடிக்கொண்டிருக்கிறார்.

எங்களுடைய இன்றைய அவலம் இதுதான். பலருக்கும் கூச்ச நோய் பிடித்துள்ளது. இதனால் அவர்கள் கூச்சப்பெட்டிக்குள் தங்களைப் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறார்கள். இந்தக் கூச்சப்பெட்டிக்குள் இருந்துகொண்டே அவர்கள் வெளி உலகத்தை கற்பனையால் உருவாக்குகிறார்கள். இதுதான் முரண். இதுதான் பெரும் பலவீனம். இதனால் தான் இலக்கியத்திலும் சரி. அரசியலிலும் சரி. சமூகச் செயற்பாட்டிலும் சரி நாங்கள் வெற்றிகளையும், உச்சங்களையும் தொட முடியாமல் இருக்கிறோம். சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளியை உண்டாக்குவதும் இந்தமாதிரியான பிரச்சினைகளே.

இதனால், இப்பொழுது செயற்படாதவர்கள் எல்லாம் மேலோங்கிவரத் தொடங்கிவிட்டார்கள். அப்படி என்றால், இது செயற்படாதவர்களின் காலமா? செயலுக்குப் போகாதவர்களின் காலமா? செயலுக்குப் போகத் தயாராகாதவர்களின் காலமா?

ஆம் அப்படித்தான்.

செயலுக்குப் போகாதவர்களின் காலமே இப்போது உள்ளது. ஆனால் மனித இயக்கமும், வாழ்வும் அப்படித் தொடர்ந்தும் எதையும் உறை நிலையில் வைத்திருக்க அனுமதிப்பதில்லை. அது எப்படியோ தனக்குத் தேவையான புதிய ஆளுமைகளை உருவாக்கும். அல்லது




அத்தகைய ஆளுமைகள் வரும்போது அதை ஏற்றுக்கொண்டு வழிவிடும்.

அப்படித்தான் இப்பொழுது தாஸ் இங்கே வந்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் முந்திய மூத்த ஆளுமைகளும் பங்களிப்பாளர் களும் கூச்சநோய்களால் உறைந்துபோய், தயக்கங்களின் கூடுகளுக்குள் சுருண்டு போய், கூச்சப்பெட்டிகளுக்குள் அடைபட்டுப்போய் தடுமாறிக்கொண்டிருக்க தாஸ் எந்தத் தயக்கமுமில்லாமல் வெளியரங்கிற்கு வந்திருக்கிறார். ஏனென்றால் தாஸ் ஒரு செயற்பாட்டாளுமை.

யுத்த முடிவுக்குப் பின்னர் உருவாகிய புதிய சூழலில் ஏற்பட்ட ஜனநாயகத்துக்கான வாய்ப்பைத் தக்வமைக்க வேண்டும் என்று தாஸ் செயற்படுகிறார். அதற்கு முன்னர் நிலவிய கறுப்பு வெள்ளைப் போக்கினை மாற்றி பன்நிறப்போக்கையும் அதற்குரிய ஜனநாயக வெளியையும் உண்டாக்க வேண்டும் என்று முயல்கிறார். நீண்ட காலமாகவே கறுப்பு வெள்ளைப் பாரம்பரியம் ஒன்றில் பழகிப்போன, ஊறிப்போன சூழலை நெகிழச் செய்ய வேண்டும் என்றால் அதற்காகக் கடுமையாக முயற்சிக்கவும் வேண்டும்.


பொதுவெளி என்பது துடக்குப் பார்ப்போரின் அரங்கு அல்ல. துடக்குப் பார்ப்போர் ஒருபோதும் பொது வெளியை நெருங்க முடியாது. அதை அவர்கள் நியாயமாக கற்பனை கூடப் பண்ணிப்பார்க்க முடியாது.

யாழ் இலக்கியக் குவியத்தினால், யுத்தம் முடிந்த பிறகான 05 ஆண்டுகளில் பல நற்காரியங்கள் நடந் திருக்கின்றன. புதிய இளம் படைப்பாளிகள் உருவாகி ஊடாடுகிறார்கள். இவர்களில் பலரும் கவனிக்கத்தக்க விதமாக தங்கள் படைப்புகளையும் தந்திருக்கிறார்கள்.

அணிகள், தரப்புகள் கறுப்பு ஆடுகள் வெள்ளை ஆடுகள் என்ற நிற பேதங்கள் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, எல்லோரும் ஊடாடக்கூடிய ஒரு களமாக யாழ் இலக்கியக் குவியம் இன்று உருவாகியுள்ளது.

யாழ் இலக்கியக் குவியம் சீரியஸ்க்கு போக வேண்டும் என்று கருதுவோர் உண்டு. அதை நானும்

# ஹார்ட் ட்ரைவ் தூங்குகிறதா?



பல நேரங்களில், நாம் கம்ப்யூட்டரில் எந்தப் பணியையும் மேற்கொள்ளாமல், வேறு வேலைகளைப் பார்த்துக் கொண்டிருப்போம். அப்போது ஹார்ட் ட்ரைவ் என்ன செய்திடும்? அதுவும் எந்த வேலையும் மேற்கொள்ளாமல், செயற்படாமல் இருக்குமா? அப்படி என்றால், அதன் செயலாக்கத்தினைக் காட்டும் வேலை அப்படியே நின்றுவிடுமா? ஆம், அப்போதைக்கு அது ஒத்தி வைக்கப்படும். ஏனென்றால், நாம் தொடரும் வேலையினை மேற்கொள்ள, அப்படி என்ன வேலையை அது பார்த்துக் கொண்டிருந்தது. அதனை நாம் கண்காணித்து அல்லது தேடிப் பார்க்க இயலுமா? முடியாது. ஹார்ட் ட்ரைவில் உள்ள பைல்களை, இந்த வகைப்படுத்தும் டூல், தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அதில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுகிறதா என்று ஆய்வு செய்து, மாற்றங்களை பதிந்து வைத்துக் கொள்கிறது. இந்தப் பணி தான் தொடர்ந்து நடைபெறுகிறது.

**டிஸ்க் டிபிராக்** (Disk defragmentaion)

ஹார்ட் ட்ரைவில் உள்ள பைல்களைத் தொடர்ச்சியாக ஹார்ட் ட்ரைவில் அடுக்கி வைத்திடும் வேலையே, டிஸ்க் டிபிராக் என அழைக்கப்படுகிறது. நாம் பைல்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தாலும், ஹார்ட் டிஸ்க்கில் உள்ள பைல்கள் அனைத்தையும் டிபிராக் செய்திடும் பணியை, ஹார்ட் டிஸ்க் மேற்கொள்கிறது. இந்தப் பணி, கம்ப்யூட்டரில் வேலை எதுவும் மேற்கொள்ளாத போது அமைத்திருந்தால், பைல்களைப் பேக் அப் செய்து நகல்களை எடுத்து வைக்கும் பணி, நாம் கம்ப்யூட்டரை விட்டு விலகுகையிலும் மேற்கொள்ளப்படும்.

**தானாக அப்டேட் செய்தல்** (Automatic update)

நாம் வேலை செய்யாதபோது, ஹார்ட் ட்ரைவ் வேலை செய்வதாக நமக்கு அடையாளம் காட்டப்பட்டால், சிஸ்டம் அப்ளிகேஷன் புரோகிராம்கள், தங்களை அப்டேட் செய்வதற்காக பைல்களைத் தரவிறக்கம் செய்து கொண்டிருக்கலாம்.

மேலே சொல்லப்பட்டிருப்பவை எல்லாம், ஹார்ட் டிஸ்க் மேற்கொள்ளும் சில தொடர் பணிகள் தான். இன்னும் பல பணிகளை, ஹார்ட் ட்ரைவ் தானாகவே மேற்கொள்ளும்

# ஹார்ட் டிஸ்க் தூங்குகிறதா?

# சினிமா சினிமா

☯ பிரபு சாலமனின் “மைனா”, “கும்கி” பாடல்களுக்காகவும் பேசப்பட்ட படங்கள். இப்போது “கயல்” படத்திலும் யுகபாரதி - இமான் கூட்டணி தான் பிரபு சாலமனுக்கு. “வரிகளுக்கு பக்க பலமாக நின்று இசை தருவார் இமான். கதை ஓட்டத்தைப் புரிந்து வரிகள் தருவார் யுகபாரதி. எந்நேரத்திலும் அழைத்து பேச இருவரும் மறுப்பதில்லை. இதற்கெல்லாம் உடன்பட்டு இருப்பதால்தான் இந்த கூட்டணி வெற்றிக் கூட்டணி. என்னை, என் கதையை புரிந்தவர்கள் அவர்கள். என் வெற்றியைத் தன் வெற்றியாக பார்க்கும் மனம் கொண்டவர்கள். எளிமையான வரிகள், அதை தெளிவாக முன் வைக்கிற இசை-



தான் இந்தக் கூட்டணியின் பலம்..” என்கிறார் பிரபு சாலமன்.

☯ இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற விருது

☯ திரைக்கு பின்னால் பணியாற்றும் கலைஞர்கள் அவ்வப்போது திரையிலும் தங்களது கவனத்தை செலுத்துவதுண்டு. தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர்கள் என இந்த வரிசையில் தற்போது இணைந்திருப்பவர்கள் விநியோகஸ்தர்கள். கலைப்புலி சேகரன் இயக்கி வரும் “ஒரு பூ ஒரு துப்பாக்கி.” படத்தில் தமிழகத்தின் சினிமா விநியோக உரிமையில் முன்னணியில் இருக்கும் கதிரவன், ரஞ்சித், ஷியாம் உள்ளிட்ட பலர் இணைந்து நடிக்கிறார்கள்.

☯ விஜய்யின், கத்தி படத்திற்கு இசையமைத்திருக்கும் அனிருத், பல முன்னணி இசையமைப்பாளர்களை பின்தள்ளி, முன்னணி இடத்துக்கு வந்து விட்டதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இதற்கு காரணம், ஏ.ஆர்.ரஹ்மான், ஹாரிஸ் ஜெயராஜ் மற்றும் யுவன் சங்கர் ராஜா போன்ற முன்னணி இசையமைப்பாளர்களின் சமீபத்திய பாடல்களை விட, அனிருத்தின், கத்தி படப் பாடல்கள் தான் இப்போது வரை, ஹிட் லிஸ்டில் உள்ளன.

☯ அஜித்தின், “என்னை அறிந்தால்” படத்தில் அனுஷ்கா, த்ரிஷாவைத் தொடர்ந்து, இப்போது, பார்வதி நாயரையும் மூன்றாவது நாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளார் கௌதம் மேனன்.

☯ ஹொலிவுட்டில், தலைமுறைகளைத் தாண்டி ரசிகர்களைக் கவர்ந்து கொண்டிருக்கும் கதாபாத்திரம் ஜேம்ஸ் பொண்ட். 2012ஆம் ஆண்டு வெளியான 23ஆவது ஜேம்ஸ் பொண்ட் திரைப்படமான ஞமலகுயடட, முதன்முறையாக ஒரு பில்லியன் வசூலைத் தாண்டி சாதனை படைத்தது. தற்போது SkyFall இயக்குநர் சாம் மெண்டிஸ் இயக்கத்தில், டானியல் க்ரெய்க் நடிக்க, 24ஆவது ஜேம்ஸ் பொண்ட் திரைப்படம் உருவாகிறது. பெயர் Spectre.

☯ “தங்களை கடவுளுக்கு அருகில் எடுத்துச் செல்ல, சிலர் போதை மருந்தை உட்கொள்கிறார்கள். ஆனால் அது வெறும் மாயை மட்டுமே. அதிகமாக போதை மருந்து எடுத்துக் கொள்ளும்போது வேறு நிலைக்குச் சென்றது போல இருக்கும். போதை, மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வைத் தரும். கடவுளுக்கு அருகில் இருப்பது போல தோன்றும். ஆனால் முடிவில் அது உங்களைக் கொல்லும். நான் அனைத்தையும் கடந்துதான் வந்துள்ளேன்.”

- பொப் பாடகி மடோனா

# கல்விக்காக எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள நாம் தயார்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு





கல்வியால் மேம்பட்ட ஒரு சமூகத்தை எந்த சக்திகளாலும் வீழ்த்திவிடமுடியாது. எனவே எமது இளைய தலைமுறையினரை அறிவார்ந்த சமூகமாக உருவாக்குவதற்காக நாம் அயராது உழைத்து வருகின்றோம். அதற்காக நாம் படைமுகாமிருந்த பகுதியைக்கூட மீட்டு பல்கலைக் கழகத்தை உருவாக்கியிருக்கின்றோம். என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்திற்கான பார்வையாளர் இருக்கை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்தின் பின் நாம் கல்விக்கே அதிகமான நிதியினைப் பயன்படுத்தியிருக்கின்றோம். ஏனெனில், கல்விமேம்பாட்டுக்கூடாகவே எமது சமூகம் எதிர்கொண்டு வரும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும். எதிர்கால சமூகம் அறிவார்ந்த சமூகமாக உருவாகும்போதுதான் எமது இனத்திற்கான சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்க முடியும்.

யுத்த சூழலுக்குள் வாழும்போது எமது மாணவ சமூகம் கல்வி பற்றி சிந்தித்துப் பார்க்கவில்லை. அந்தளவிற்கு யுத்தம் தீவிரமாக நடைபெற்றது. பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலையில் பெற்றோர் ஏங்கிக்கொண்டிருந்தனர். ஆனால், தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துள்ள இந்த அமைதியான சூழலில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி தொடர்பாக அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். அதன் விளைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் குறுகிய காலப் பகுதிக்குள் கல்வி வளர்ச்சியின் வீதம் பாரிய அளவில் உயர்வடைந்துள்ளது. என்றார்.

வித்தியாலய அதிபர் பங்கையச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சிகோட்டக் கல்விப்பணிப்பாளர் அமிர்தலிங்கம் மற்றும் கல்விசார் அதிகாரிகள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திசங்கச் செயலாளர் மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## வாழ்வக மாணவர்களுக்கு மடிக்கணனிகள் வழங்கப்பட்டன

(திருநெல்வேலி)

சுன்னாகம் வாழ்வக மாணவர்களுக்கு கணனிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வாழ்வக மண்டபத்தில் வாழ்வகத்தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவராலய பிரதித் துணைத் தூதுவர் எஸ்.ரீ மூர்த்தி கலந்து கொண்டார்.

அத்துடன் றோட்டரிக் கழகத் தலைவர் ரவி மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த சென்னை மற்றும் பெங்களூர் றோட்டரிக் கழக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

வாழ்வக மாணவர்கள் மூவருக்கு மடிக்கணனிகள் வழங்கப்பட்டன. வாழ்வகத்தலைவரிடம் வாழ்வக மாணவர்களின் தேவைக்காக சலவை இயந்திரமொன்றும் கையளிக்கப்பட்டது. அத்துடன் விழிப்புலனிழந்தவர்களுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. வடமாகாண முதலமைச்சர் இவற்றை வழங்கி வைத்தார்.

இந்திய றோட்டரிக் கழகங்களின் உறுப்பினர்களினால் நல்லூர் றோட்டரிக் கழகத்தின் ஊடாக இப் பொருட்கள் வாழ்வகத்துக்கு வழங்கப்பட்டன.

ஆரம்பத்தில் வாழ்வக ஸ்தாபகர் அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்துரை மண்டபத்தில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் விருந்தினர்கள் அனைவரும் செல்லா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு மங்கள விளங்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்திய பிரதித் துணைத் தூதுவர் எஸ்.ரி.மூர்த்தி மற்றும் றோட்டரிக் கழக உறுப்பினர்கள் உரை நிகழ்த்தினர். (137)

## நினைவுதின நிகழ்வு

(வவுனியா)

வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டமும் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் இணைந்து நடாத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 135ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா இலுபையடியில் அமைந்துள்ள நாவலர் பெருமான் சிலையடியில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் மிக அண்மையில் இடம் பெற்றது .

இந்நிகழ்வில் வவுனியாவைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்கள் இணைந்து இந்த நிகழ்வை சிறப்பித்ததுடன் பாடசாலை மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர். (90)

## பூநகரி பொது நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

**பூநகரி பொதுநூலகத்தினால் நடாத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாதம் ஒக்ரோபர்-2014 போட்டிகளுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. (நேற்றைய தொடர்)**

5 கட்டுரைப் போட்டி பிரிவு-1

த.நிரோஜினி (கிளி/செல்லியாதீவு அ.த.க.பாடசாலை), ச.சயிந்தா (கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை) தி.மயூரி கிளி/செல்லியாதீவு அ.த.க.பாடசாலை)

பிரிவு-2

.தி.கபிலா (கிளி/கறுக்காய்தீவு மகா வித்தியாலயம்), டி.தமிழினி (கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை),ம.நேமிகா, இ.நிதர்சன் (கிளி/பூநகரி மத்திய கல்லூரி)

விரைவு கணிதப்போட்டி

இ.சக்தனா, ஐ.யாழ்மதி, யோ.கம்சனா, இ.லலிதாயினி (கிளி/பூநகரி மத்திய கல்லூரி)

அபிநயத்துடன் கதை கூறல் பிரிவு 1

சி.யாழினி (கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை)

வெ.கனிநிலா, வெ.ஏஞ்சல் (கிளி/பூநகரி மத்திய கல்லூரி)

பிரிவு-2

ரா.வாசுகி (கிளி/செல்லியாதீவு அ.த.க.பாடசாலை), ஜெ.ஜெனிலா (கிளி.விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), த.சஞ்சயன் (கிளி/பரமன் கிராய் அ.த.க.பாடசாலை), அ.சுடர் (கிளி/செல்லி யாதீவு அ.த.க. பாடசாலை) முற்றும்.

## மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்து உதவி வழங்கல்

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் மருத்துவ சிகிச்சைக்கான போக்குவரத்து உதவி தேவைப்படும் 6 பேருக்கு தலா 1500 ரூபா வீதம் வழங்குவதற்கான நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யுனிசெவ் நிறுவன நிதி நன்கொடை மூலமாக இந்த உதவி வழங்கப்படுகிறது.

பிரதேச செயலரால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் இந்த நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன்,

கண்டாவளை பிரதேசத்திலிருந்து தூர இடங்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக பிரயாணம் செய்த 27 பேர் மிக அண்மையில் இந்த நிதியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்திலுள்ள ஏனைய 32 பிரதேச செயலகங்களுக்கும் இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. (90)

## மறதியால் கைத்தொலைபேசியை பறிகொடுத்தார் நபர்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள உணவகமொன்றில் உணவருந்தச் சென்றவர் தனது மறதி காரணமாக கைத்தொலைபேசியை பறிகொடுத்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.


குறித்த நபர் தனது வேலையை முடித்துவிட்டு உணவகத்தில் உணவருந்தச் சென்றுள்ளார். அங்கு சென்ற அவர் சாப்பாட்டு மேசையில் கைத்தொலைபேசியை வைத்து விட்டு உணவருந்தி பணத்தை செலுத்திவிட்டு வீடு சென்றுள்ளார்.

வீடு வந்த பின்னரே அவருக்கு கைத்தொலைபேசி ஞாபகம் ஏற்பட அத்தொலைபேசிக்கு தொடர்பை ஏற்படுத்திய போது தொடர்பு துண்டிக்கப்பட்டதாக தெரியவந்தது. இதனையடுத்து கவலையடைந்த குறித்த நபர் உணவகத்திற்குச் சென்று வினவியபோதும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை என அவர் மனவேதனையுடன் தெரிவித்தார். (150)






வலிகாமம் கல்வி வலயத்தின் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இதில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் சாதனையாளர் ஒருவருக்கு விருது வழங்குவதையும் விருது பெற்றவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம். (06)



யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களுடன் நிற்பதைக் காணலாம். (63)

# அக்கராயன் பிரதான வீதியை புனரமைக்க ஆவன செய்வார்களா?

## கேள்வி எழுப்பும் கிராம மக்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் அக்கராயன் செல்லும் வீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் 23 கிலோ மீற்றர் வீதி திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுவதுடன் தற்போது பெய்துள்ள மழையால் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்துச்செய்ய முடியாத ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நாளாந்தம் இவ்வீதியை பயன்படுத்தும் மாணவர்கள்,அரச அலுவலர்கள், தொழிலுக்கு செல்வோர் என பலர் தற்போது இவ்வீதியை பயன்படுத்த முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

500 குடும்பங்கள் வரை பயன படுத்தும் இவ்வீதி புனரமைக்கப்படுமிடத்து மக்கள் இலகு வான போக்குவரத்தை மேற் கொள்ள முடியும் பேருந்து சேவைகள் இடம்பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் குறித்த வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# இணுவில் முன்பள்ளியின் வருடாந்த கலை விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடார்ந்த கலை விழா நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலையத்தலைவர் ச.சிவசங்கர் தலைமையில் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது . இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு பொது வைத்திய சாலை பணிப்பாளர் பொது வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி அ.ரகுபதி சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய ஆசிரியர்கள் வீ.கனகசபாபதி, செ.ஜெயசோதிவரதன் கௌரவ விருந்தினர்களாக வர்த்தகர் இ.அம்பலவாணர் செ.செல்வம் து.சின்னராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். நிகழ்வுக்கான தொடக்கவுரையினை இணுவில் பொது நூலக போசகர் யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத்தலைவர் பேராசிரியர் க.தேவராஜா வழங்கவுள்ளார். கலை நிகழ்வுகளாக பாடல் குழு நடனம் தமிழப்பேச்சு ஆங்கிலப் பேச்சு இசையும் அசைவும் கவிதை போன்ற கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (63)

# மிக வறுமையில் வாழும் குடும்பத்தின் அவலநிலையை கவனிப்பார்களா?



(கரணவாய்)

நெல்லியடி கரவெட்டி ஸ்ரீநாரதர் வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள கிராமப்புற பகுதியில் வறுமையின் பிடியில் சிக்கி பனையோலையால் வேயப்பட்ட குடிசையில் வயோதிபர் ஒருவர் தனது நான்கு பிள்ளைகளுடன் மிகக் க்ஷடத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனைஓலையால் வேயப்பட்ட மண்குடிசையில் வாழ்ந்து வரும் இக்குடும்பம் வாழ்வாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையிலே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இந்திய வீட்டுத்திட்டம், அரசசார்பற்ற நிறுவனங்களின் வீட்டுத்திட்டம் என் வீட்டுத்திட்ட வசதிகள் முன்னெடுக்கப்பட்டு செயற்படுத்தப்படும் நிலையில இவ்வாறான குடும்பங்களுக்கு ஏன் இந்த வீட்டுத்திட்டம் கிடைப்பதில்லை என கேள்வி எழுப்பப்படுகிறது.

குறித்த வயோதிபரின் குடிசை வீடு தற்போது பெய்துள்ள மழையினால் அரைவாசிப்பகுதி சேதமடைந்த நிலையில் ஈரலிப்பான மண்நிலத்தில் வாழ்ந்து வரும் இக்குடும்பத்தின் நிலை பற்றி பொதுஅமைப்புக்களோ அரச அதிகாரிகளோ கவனம் செலுத்துவார்களா என கேள்வி எழுப்பும் மக்கள் இவ்வாறு மிகவும் கஷ்டப்படும் நிலையில் உள்ள குறித்த குடும்பத்திற்கு தற்காலிகமாக வீட்டை அமைப்பதற்குரிய உதவிகளையேனும் பொது அமைப்புக்களும் அரச அதிகாரிகளும் முன்வந்து உதவவேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# பதிவிருக்கப் பெட்டகம்

"தாத்தா... நாலு ரூபா முத்திரை இல்லை... அஞ்சு ரூபா முத்திரை ஒன்று தாறன். ஒரு ரூபாய்தானே கூடப் போகுது, பரவாயில்லை"
"சரியம்மா... நான் நாலு ரூபா தாறன். நீ அஞ்சு ரூபா முத்திரை ஒன்று தாம்மா"

*** *** *** ***

**சிறுவன் :** "புறாவைவிட ஈ வேகமா பறக்கும் என்று, எப்பிடித் தாத்தா சொல்றீங்கள்?"
**தாத்தா :** "அந்தக் காலத்தில புறா மூலம் தகவல் அனுப்பினாங்கள்; இப்பெல்லாம் "ஈ' மூலம் மெயில் அனுப்புறாங்களாமே!"

*** *** *** ***

"மக்களை முந்தி மாதிரியெல்லாம் இப்ப ஏமாத்த முடியேல்ல!"
"ஏன்?"
"முன்னெல்லாம் ஒரு நூறு ரூபா கடன் வாங்க ஒரு பொய் சொல்வேன். இப்ப ஒரு நாடகமே போட வேண்டியிருக்கே."

*** *** *** ***

**நீதிபதி :** நகையைத் திருடினதாய் உன் மேல் உள்ள வழக்கில் நீ குற்றவாளி இல்லை என்று நிரூபணம் ஆகிவிட்டது, நீ போகலாம்.
**குற்றவாளி :** அப்படியென்றால் திருடின நகைகளை நானே வைச்சுக்கொள்ளட்டுமா ஐயா...

*** *** *** ***

"கோர்ட்டிலே என்ன கலாட்டா?"
"குற்றவாளிக் கூண்டில மூட்டைப் பூச்சியை நசுக்க கைதி நீதிபதியின் சுத்தியலைக் கேட்டிருக்கிறான்!"

*** *** *** ***

"ஒருத்தருக்கு ஏணியா இருந்ததுக்காகவா உன்னைப் பொலிஸ் தேடுது?"
"ஆமாம்... என் தோள் மேலே ஏறித்தானே திருடினவன் வீட்டுக்குள்ளே நுழைஞ்சான்"

*** *** *** ***

**பொலீஸ்காரர்:** என்ன சொல்றீங்கள்? உங்கள் வீட்டிலே திருடியவனுக்கு இதுதான் முதல் திருட்டா?
**புகார் கொடுக்க வந்தவர்:** ஆமாம் சேர்... கழுத்துல "க' போர்ட் மாட்டியிருந்தான்!

*** *** *** ***

**விக்கி:** பக்கத்து வீட்டு கோகுல் காணாமல் போயிட்டானாம்..!
**அம்மா:** அதுக்கு, நீ ஏன்ரா கம்ப்யூட்டர்ல நோண்டிக்கொண்டிருக்கிறாய்?
**விக்கி:** கூகுள்-ல தேடினால் எதுவானாலும் கிடைக்கும் என்கிறார்களே, கோகுல் கிடைக்காமலா போயிடுவான்..?

*** *** *** ***

**இன்ஸ்பெக்டர்:** டேய்... உண்மையைச் சொல்லாட்டி பெல்ட்டைக் கழட்டி வெளுப்பன்..!
**ரவுடி:** பாத்து சேர்... ட்ரவுசர் கழண்டு விழுந்திடப் போகுது..!

*** *** *** ***

"எதுக்கு நீங்களே ஒருத்தரை செற் பண்ணி உங்களுடைய படத்தின் கதையை அவருடையது என்று கேஸ் போட வைச்சிருக்கிறீங்கள்?"
"அப்பத்தானே படத்திலே கதை இருக்குது என்று சனங்கள் நம்புவார்கள்"

*** *** *** ***

"இந்தப் படத்தில எனக்கு நல்ல "பிரேக்' கிடைக்கும் என்று நினைக்கிறேன்".

"எப்படி?"
"படத்தில எனக்குக் கிடைச்சிருக்கிறது... பஸ் ட்றைவர் வேஷம்"

*** *** *** ***

**ஒருவர்:** இப்ப வந்த படங்கள்ல உங்களுடைய படம்தான் பாக்கிற மாதிரி இருக்கு
**இயக்குநர்:** அப்படியா?
**ஒருவர்:** மற்றப் படங்களுக்கெல்லாம் கூட்டம் அதிகம். பார்க்க முடியேல்ல.

*** *** *** ***

"பெண் பார்க்க வந்த நீங்கள், எதுக்குச் செம்பிலே தண்ணியும் கொண்டு வந்திருக்கிறீங்கள்?"
"பெண் பிரமாதமான அழகு என்று எல்லாரும் சொன்னார்கள். பெண்ணின் அழகிலே மாப்பிள்ளை மயங்கிவிட்டால், தண்ணி தெளிச்சு எழுப்பத்தான்!"

*** *** *** ***

"உனக்குத்தான் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொட்டியதே... பிறகும் என்ன வரம் கேட்டு வேண்டுகிறாய்?"
"கூரையைத் திருத்தித் தரச் சொல்லித்தான்...!"

# என்னை போர்க்குற்றவாளியாக சித்தரிக்க திரைமறைவில் நடக்கிறது சூழ்ச்சி

(கொழும்பு)

எம்மை சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்கான சூழ்ச்சிகள் இடம் பெறுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், "நான் ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரை இதனைச் செய்ய முடியாது என்பதால் என்னைப் பதவியிலிருந்து இறக்கி சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் ஒப்படைத்து தண்டனை பெற்றுக் கொடுக்க சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.



ஜனாதிபதியாக நான் பதவி வகிக்கும் வரை என்னை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாத காரணத்தால் இத்தகைய சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. தோல்வியுறச் செய்து தாருங்கள் நாம் அவரைக் கொண்டு சென்று சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவோம்" என்றே சம்பந்தப்பட்டவர்கள் கோருகின்றனர். இதற்கு மறைமுகமாக தூண்டிவிடும் செயற்பாடுகளில் ஹர்சவும் விஜேசிங்கவும் செயற்படுகின்றனர். இதுவே தற்போதைய நிலைமை.

எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை இழந்திருந்த மக்களுக்கு நாம் உயிர்தானம் வழங்கியதற்கு எமக்குக் கிடைக்கும் பிரதிபலன் இதுதான்.

நாடு பற்றி சிந்திக்காத மக்கள் பற்றி சிந்திக்காதவர்களே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தாய் நாடு மீது நம்பிக்கைகொண்டு தாய் நாட்டின் மீதான உணர்வைக் கொணடிருப்பதே எம் ஒவ்வொருவரதும் கடமையாக வேண்டும். எனவும் ஜனாதிபதி தெரிவீத்துள்ளார்.

# புலிகளிடம் மீட்ட தங்கம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாதது ஏன்?

## சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி

(கொழும்பு)

யுத்த காலத்தில் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தங்க ஆபரணங்கள் வழங்கப்பட்ட முறை சட்டவிரோதமானது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்க ஆபரணங்கள் இவ்வாறு பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் யுத்த காலத்தில் மீட்கப்பட்ட தங்க ஆபரணங்கள் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வழங்கியிருந்தார்.

எனினும், இந்த நடவடிக்கையானது சட்டவிரோதமானது என சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களின் தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டால் அவற்றை உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமானது எனவும் அதுவே சட்ட நடைமுறை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றிடம் பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அவை வழக்குப் பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக எதன் அடிப்படையில் எங்கு இந்த ஆபரணங்கள் வைக்கப்பட்டிருந்தன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தங்க ஆபரணங்களை மக்களுக்கு அரசியல்வாதி வழங்கியிருக்கக் கூடாது எனவும், நீதமன்றமே வழங்கியிருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓர் மாளிகையில் அண்மைக் காலமாக நாள் தோறும் 3000 - 5000 வரையிலானவர்களுக்கு இலவச விருந்து வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது ஓர் வகையிலான தேர்தல் இலஞ்சமாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர்தல் நடைபெறும் காலத்தில் இவ்வாறு விருந்து வழங்குவதானது சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றச் செயலாகும் என சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக பணமாகவோ உணவாகவோ வாக்காளர்களுக்கு அன்பளிப்பு வழங்குவது சட்டவிரோதானது எனவும், தண்டனைக்குரிய குற்றம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டும் விலை குறைப்பு

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை 7 ரூபாவாலும், மண்ணெண்ணெயின் விலை 5 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன்படி 92 ஒக்ரேன் பெற்றோல் 150 ரூபாவாகவும், டீசல் 111 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் 81 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்தமையே இந்த விலைக்குறைப்புக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி எரிபொருள் களின் விலை குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# குழுக்களின் பிரதி தவிசாளர் நடவடிக்கை எடுப்பாரா?

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, கௌரவ வடக்கின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வன்னி மற்றும் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் இணைந்து கிளிநொச்சியில் மக்கள் சேவைபுரியும் அபிவிருத்தி உதவியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதை ஊடகங்களில் பார்வையிட்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

இதன்போது பிரதம அதிநிதியாக கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில் வறுமைப்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே "மகிந்த சிந்தனை" திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் உயர்சிந்தனை நோக்கில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதாகவும் மோட்டார் சைக்கிளை பெற்ற அலுவலர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயலாற்றவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இங்கு நான் குறிப்பிட்டுக் கூற முற்படுவது யாதெனில் வடக்கில் மத்திய அரசின் கீழ் அதாவது பிரதேச செயலகங்கள் மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் சகல திட்ட மிடல்துறை சார்ந்த அபிவிருத்தி உதவியாளர்கள் (Developmet Assistant), அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (Development officers) சகலரும் மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழான மோட்டார் சைக்கிள்களை பெற்றுள்ளனர்.

ஆனால் மாகாண சபையின் உள்ளூராட்சி திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பணியாற்றும் எந்த ஒரு அபிவிருத்தி சார்ந்த அலுவல்களுக்கும் மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை.

இதனை விட முக்கிய விடயம் என்ன வென்றால் மோட்டார் சைக்கிள் வழங்க ஜனாதிபதியும் அவர்கள் சார்ந்த பிரிவும் (ஆளுநர்) தயாராக உள்ளபோது உள்ளூராட்சியுடன் தொடர்புபட்ட ஆணையாளர்கள் இவ்வாறான பட்டியல்களை தடைசெய்து இல்லாமல் பண்ணியது தான் முக்கியவிடயமாகின்றது.

ஒரு மேலதிகாரி தனக்கு கீழ் பணியாற்றும் அலுவலர்களுக்கு தனது சேவைக்காலத்தில் ஏதாவது பெற்றுக்கொடுக்க முனைபவனே உண்மையான சேவையாளன்.

அதனை விடுத்து வழங்கப்படுகின்ற திட்டங்களுக்கு ஏதோவொரு வகையில் முடக்கி திட்டங்களை அழிப்பது உண்மையான செயல் அல்ல. இதுதான் இன்று அபிவிருத்தி அலுவலர்களுக்கு வடக்கு உள்ளூராட்சியில் இடம்பெறுகின்றது.

மேலும் இதனை விட முக்கிய புதினம் என்னவென்றால் மீளவும் மோட்டார் சைக்கிள் அபிவிருத்தி சார்ந்த அலுவலர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பழவங்களை பூர்த்தி செய்து வழங்குங்கள் என கூறி விண்ணப்பங்களை பெற்று குப்பையிலே எறிந்து விட்டனர்.

ஆனால் அபிவிருத்தி அலுவலர்களோ தமக்கு மோட்டார் சைக்கிள் கிடைக்கும் என்ற நப்பாசையில் உள்ளனர் என்பது தான் வேழக்கையான விடயம்.

என்னதான் இருந்தாலும் மத்திய அரசின் கீழ் ஒரு வருட அனுபவத்தில் பணியாற்றிய அபிவிருத்தி அலுவலர்கள் மோட்டார் சைக்கிள் பெற்று மக்கள் பணி செய்ய ஆரம்பித்து விட்டனர்.

வடக்கின் உள்ளூராட்சியிள் கீழ் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று மட்டுமல்ல என்றுமே இவர்களுக்கு இப்பழு தான் இருக்கும் மோட்டார் சைக்கிலும் கிடையாது. இது தான் உண்மை நிலவரம்.

அபிவிருத்தியிலும் - மக்களிலும் - உத்தியோகத்தர்களிலும் ஆதீத நலன் உள்ள நாடாளுமன்ற குழுக்களின் பிரதிதவிசாளர் "வன்னிமைந்தன்" மு.சந்திரகுமார் கண்விழித்தால் மட்டுமே வடக்கின் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நன்மை அடைவார்கள் என்பது மட்டும் உண்மையாகும். பொறுமையே வெல்லும்.

நன்றி.

-கிளிநொச்சி-

-மோ.சை.காந்தன்
அபிவிருத்தி அலுவலர்
உள்ளூராட்சி சபை

# அங்கவீனமுற்ற படையினருக்கு விசேட உதவித்திட்டம்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் அங்கவீனமுற்ற படை வீரர்களிற்கு விசேட உதவித்திட்டங்களை அறிமுகம் செய்யும் படி ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முற்பகல் அலரி மாளிகைக்கு முன்பாக குழுமிய அங்கவீனமுற்றபடையினர் மேற்படி கோரிக்கையை முன்வைத்து அமைதிப் போராட்டம் ஒன்றை நடாத்த முயற்சித்தனர்.

ஊனமுற்ற இராணுவத்தினரின் சங்கம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

தமது குறைகளையும், கவலைகளையும் யாரும் கண்டு கொள்ளவில்லை எனவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை நடாத்துவதாகவும் குறித்த அமைப்பின் ஊட கப் பேச்சாளர் டி.எம்.பி.பீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் இடைநடுவில் குறித்த அமைப்பைச் சேர்ந்த ஐந்து பேர் அலரி மாளிகைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு உதவித்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

# முஸ்லிம் மக்களின் நிபந்தனையற்ற ஆதரவு

## மைத்திரிக்கு மட்டுமே

(கொழும்பு)

எவ்வித நிபந்தனைகளையும் முன்வைக்காது மைத்திரிபால சிறிசேனவை முஸ்லிம் மக்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்த்துவர் என்று மத்திய மாகாண சபை உறுப்பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத் ஸாலி தெரிவித்தார். பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் மாத்தறையில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முதலாவதும் நாடு, இரண்டாவதும் நாடு, மூன்றாவதும் நாடு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தற்போது தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்டவருக்கு மைத்திரிபால சிறிசேன அரசுக்குள் இருந்து வெளியேறும்வரை என்ன நடந்தது என்றே தெரியாது.

நாட்டின் சுபீட்சத்துக்காகவும், நேர்மையான ஆட்சிக்காகவும் முஸ்லிம் மக்கள் எந்தவித நிபந்தனைகளையும் முன்வைக்காது ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்து



ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவர் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

(15). பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக

01. புயற்காற்று ஊ ......ஊ என இரைந்தது    02. இங்கே வந்தவர் யார் .......

(16). கருத்தினை தமிழில் எழுதுக

01. ஒயா எனவாத ......................

02. அம்ப கஸக தியனவா த ? ..........................

(17). சிங்களக் கருத்தினை தமிழில் எழுதுக

01. கடல் மிகப் பெரியது ...............................

02. மூக்கு ..............................    03. முப்பத்தைந்து ..............................

(18). கருத்தினை தமிழில் தருக

01. BE careful........................    02. Good morning.......................

(19). கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

01. மாலை வணக்கம் ................................

02. புத்தகம் எங்கே உள்ளது? ....................

(20). மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. கறிசமைக்கும் போது எலுமிச்சம்புளி சேர்ப்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்
1. கறியை அடுப்பில் வைப்பதற்கு முன்
2. அடுப்பில் கறி இருக்கும் போது
3. அடுப்பில் இருந்து இறக்கியவுடன்
4. அடுப்பில் இருந்து இறக்கி கறி ஆறிய பின்

02. இலங்கையில் மரத்தளபாடங்களுக்குப் பிரசித்தி பெற்ற நகரம்
1. களனி    2. மொரட்டுவ    3. குருநாகல்    4. பிலிமத்தலாவ

03. ஐந்து சோடிக்கால்களை உடைய பிராணி
1. நண்டு    2. மரவட்டை    3. உண்ணி    4. தேள்

04. பித்தளைப் பாத்திரங்களை மினுக்கப் பொருத்தமல்லாத பொருள்
1. பழப்புளி    2. கொறுக்காய்    3. உப்பு    4. எலுமிச்சம் பழம்

05. மழை வீழ்ச்சியின் அளவை அளக்க மழைமானி ஒன்று வைக்கப்பட வேண்டிய மிகச்சரியான இடம்
1. வீட்டுக்கூரைக்கு கீழ்    2. மரத்தின் கீழ்
3. வகுப்பறையினுள்    4. ஒரு வெளியான இடத்தில்

06. மரக்கறி வகைகளின் போசாக்குத் தன்மைகள் குறைவடையக்கூடிய சந்தர்ப்பம்
1. அரை அவியலாக சமைத்தல்    2. பச்சையாக உண்ணுதல்
3. அரிவதற்கு முன் கழுவுதல்    4. அதிக சூட்டில் நீண்ட நேரம் சமைத்தல்

07. வரைந்து கொண்ட அலங்காரம் ஒன்றினை மீண்டும் பயன்படுத்தி செய்யப்படும் சித்திரம்
1. அச்சுப்பதித்தல்    2. பெத்திக்    3. கொலாஜ்    4. பரவற்புமுறை

08. சல்வீனியாத்தாவரம் வளரும் விதம்
1. நீரில் அமிழ்ந்து வளரும்    2. நீர் மட்டத்தில் மிதந்து வளரும்
3. நிலத்தில் வேரூன்றி நீரில் மிதக்கும்    4. நிலத்தில் வளரும்

09. நீர் வெறுப்பு நோய் பரவ முடியாதது
1. நாய்களினால்    2. கரப்பான் பூச்சிகளினால்    3. பூனைகளினால்    4. நரிகளினால்

10. பழம் பழுத்ததும் வெடிப்புக்கு உள்ளாகுவது
1. மரமுந்திரி    2. தூரியம்    3. பப்பாசி    4. வில்வம்

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

நாம் பிறர் பொருளையும் நம்பொருள் போல கருத வேண்டும். எமது பொதுச்சொத்துக்களான சந்தைகள், நூல் நிலையங்கள் பூங்காக்கள் என்பவற்றையும் பேணிப்பாதுகாத்தல் வேண்டும்.

01. நூலகங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக? ..................................

02. பந்தியில் இடம்பெறுள்ள உவமானம் யாது? ..................................

03. பந்தியில் இடம்பெற்றுள்ள அடைமொழிச்சொல்லை எழுதுக? ..................................

04. பூங்காக்கள் என்பதன் ஒருமைச்சொல்லை எழுதுக? ..................................

05. எவரது பொருளை நம் பொருள் போல கருத வேண்டும்? ..................................

(02) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இணைமொழிகளை தெரிந்து எழுதுக.

01. முகுந்தன் ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்கினான் ..................................

02. அவரது பேரும் புகழும் உலகெங்கும் பரவியது ..................................

(03). வெற்றிடங்களுக்குப் பொருத்தமான மரபுச்சொற்களை எழுதுக

01. நெல்லுக்கு நாற்று போல பனைக்கு ..................................

02. பல்லி சொல்லும் அது போல வண்டு ..................................

(04) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடையாளபடுத்துக

01. சிபிச்சக்கரவர்த்தியின் நற்பண்புகள் யாவை? ( )

02. எல்லா இடங்களிலும் கனிமியின் ஆதிக்கமே காணப்படுகின்றன ( )

(05) பின்வரும் வாக்கியங்களில் செயற்படுபொருளை தெரிந்து எழுதுக

01. நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார் ..................................

02. ஆடு குழை தின்றது ..................................

03. சிறுவர்கள் பால் பருகினார்கள் ..................................

04. நாய் இறைச்சியைக் கௌவியது ..................................

(06). பின்வரும் தடித்த எழுத்துச்சொல்லின் கருத்தை எழுதுக

01. காந்தி அடிகளின் வரலாறு பற்றி கூறும் நூல் எது? ..................................

02. உழைப்பும் உறுதியும் உள்ளவனுக்கு வெற்றி திண்ணம் ..................................

03. நான் செய்யும் நற்பணிகளுக்கு எனது தாய் உறுதுணை வழங்கினாள் ..................................

04. மடியில் விழுந்த புறாவிற்கு அரசன் அபயம் அளித்தான்

(07) கணித வினாக்களுக்கு விடை தருக

01. உலக காற்பந்தாட்ட போட்டியானது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். 28 ஆவது காற்பந்தாட்டப் போட்டியானது 2008 ஆம் ஆண்டு நடைபெற்றது எனின் 17 ஆவது காற்பந்தாட்டப் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெற்றிருக்கும்?

...................................


02. ஞாயிற்றுக்கிழமைகள் ஐந்தினைக் கொண்ட ஜனவரி மாதத்தில் அந்த ஞாயிற்றுக்கிழமைகளின் திகதிகளைக் கூட்டினால் வரக்கூடிய ஆகக்கூடிய பெறுமானம்?

...........................................................

03. ஒரு பாத்திரத்தில் 2லீற்றர் 375 மில்லிலீற்றர் குளிர்பானம் உள்ளது. அக்குளிர் பானம் ஐந்து சம போத்தல்களில் நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது?

...........................................................

04.




இவ்வுருவில் உள்ள வடிவத்தை சமனாக்குவதற்கு அதன் அகலப்பக்கத்துடன் மேலும் எத்தனை சென்ரிமீற்றரை கூட்ட வேண்டும்?

.......................................cm

05. தற்போது எனது வயது 9 ஆகும். எனது தம்பியின் வயது 3ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதில் இருமடங்காக இருக்கும்?

...................................

06. எனது மாமா அவரது 30ஆவது பிறந்ததினத்தை 2008ஆம் ஆண்டு கொண்டாடினார். எனின் அவரது 70 ஆவது பிறந்ததினத்தை எந்த வருடம் கொண்டாடுவார்?

...................................

07. 1800ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 500ml நீர் இருந்தது. அப்பாத்திரத்தில் மேலும் 1.5லீற்றர் நீரை கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

...................................


08. தரப்பட்ட எண்ணை எழுத்துக்களில் எழுதுக? 40039 ...................................

09. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்களை உரோமன் இலக்கத்தில் எழுதுக,


1) ஐந்து .............. 2) ஒன்பது ..............

10. இவ்வெட்டுருவை மடித்து ஒட்டும் போது தோன்றும் திண்மம் யாது?

...........................................................



11. உருவின் சுற்றளவை காண்க?




.....................

12. பிற்பகல் 2.45க்கு வீட்டில் இருந்து புறப்பட்ட சீதா 35 நிமிடங்களில் நூல் நிலையத்திற்கு சென்றாள். அவள் நூல் நிலையத்தை அடைந்த நேரத்தை தருக?

...........................................................

13. ஓர் அடிமட்டத்தின் விலை ரூபா 12.50 எனின் 12 அடிமட்டங்களின் விலை யாது?

...........................................................

14. 7m நீளமான நாடா ஒன்றில் இருந்து ஒவ்வொன்றும் 75cm நீளமான 6 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவில் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?

...................................



(08) காட்டில் வளரும் தாவரங்கள் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக

ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருப்பதுடன் எழுவாய் பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்

01. ...........................................................

02. ...........................................................

03. ...........................................................

(09). பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத்தோடு ஒத்தே
ஒழுகிக்கொள்ள வேண்டும்

01. கல்வியை நாம் எவ்வாறு கற்க வேண்டும்? ...................................

02. பாடலில் வந்துள்ள இணைமொழி யாது? ...................................

03. தீமை என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக? ...................................

04. பாடலில் இடம் பெற்றுள்ள முன்னிலை பன்மை பெயர்ச்சொல் யாது? ...................................

05. உலக நடப்புடன் இசைந்து வாழ வேண்டும் என்ற கருத்தை தரும் வரி எது?

...................................

06. வித்தை என்ற கருத்தை தரும் சொல்லை தெரிந்து எழுதுக? ...................................

07. சுழியும், விசிறியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லை எழுதுக? ...................................

(10) பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக

01. இராமன் பரதன் இலக்குமணன் சத்துருக்கன் ஆகியோர் சகோதரர்கள் ஆவார்கள் ..................

02. நன்றி தாயே நன்றி ..................

(11). பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுத்துப்பிழைகளை திருத்தி எழுதுக

01. மாளை வேலையில் விலையாடுவோம்

...........................................................

02. உடட்பயிற்சி உட்சாகத்தை தறும்

...........................................................

03. குத்தவாளி தண்டனை பெற்றான்

...........................................................

(12). பின்வரும் சொற்களை க வரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக

01. கிழமை , கடிதம், கீர்த்தி , கைதி , கௌதமன் , காரியம்

...........................................................

(13). கருத்தினை தருக

01. தலைகவிழ்தல் .................. 02. முகத்தில் கரிபூசல் ..................

(14). பழமொழிகளின் இடைவெளிகளை நிரப்புக

01. வல்லவனுக்குப் .................................. ஆயுதம்

02. சீரைத் தேடின் .................................. தேடு

03. நாம் ஒன்று நினைக்க .................................. ஒன்று நினைத்தது

04. அலை வரும் போதே ..................................

# களனி தொகுதிக்கு அமைப்பாளர் யார்?

## தெற்கில் மும்முனைப் போட்டி

களனித் தொகுதி ஆளும் கட்சிக்கான அமைப்பாளர் பதவி அடுத்து யாருக்கு என்ற சார்ச்சை தெற்கில் இப்போது சூடுபிடித்துள்ளது.

இதனால் மேற்படி பதவியை குறிவைத்து மும்முனைப் போட்டி ஒன்று அங்கு ஏற்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா, கடந்த மாகாண சபைத் தேர்தலில் தோல்வியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ரெஹெனசிறி வராகொட மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர் சிசிர ஜயகொட ஆகியோருக்கிடையே இந்த போட்டி ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஆளும் கட்சியுடன் முரண்பட்டுக் கொண்டுள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு இந்தப் பதவி வழங்கப்படவில்லை எனில் அவர பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவளிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தவிர பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ, அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு இந்தப் பதவி வழங்கப்படக்கூடாது என்றும் தமது நெருக்கமானவர்களுக்கே இந்தப் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் அழுத்தம் கொடுத்து வருகின்றமை இந்த மல்யுத்தத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது


## புகலிடம் கோரிய இலங்கையர்கள் நவுறு தீவுக்கு இடமாற்றம்

இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியா சென்ற புகழிடக் கோரிக்கையாளர்கள் சிலரை அவுஸ்திரேலிய முகாம்களில் இருந்து நவுறு அகதிகள் முகாமுக்கு மாற்ற தீர்மானிக்கப் பட்டுள்ளது.

விமானம் மூலம் நேற்று அவர் கள் இடமாற்றப்பட்டனர்.

25 குடும்பங்களைச் சேர்ந்த இவர்களில் 44 பேர் இவ்வாறு மாற்றப்பட்டதாக தெரியவந்துள் ளது.

குறித்த புகழிடக் கோரிக்கையாளர்கள் எட்டு மாதங்களுக்கு முன்னர் அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்தவர்கள் என அந் நாட்டு ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக ஏ.எச்.எம். அஸ்வர் பதவியேற்றபோது...

## கலாபூஷணம் விருது-2014 தெரிவானவர்கள் விபரம் வருமாறு

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த கலைஞர்களுக்கு வருடாவருடம் கலாபூஷண விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த வருடமும் 100 கலைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படவுள்ளதுடன் இதில் யாழ். மாவட்டத்தில் இவ்விருதுக்கு தெரிவான 47 பேரின பெயர் விபரம் வருமாறு,

கதிரவேலு தெல்லிப்பளை (சிற்பக்கலை), தி.தவராசா பொலிகண்டி (கிராமியக்கலை), செல்வி விஜயலட்சுமி சண்முகராசா யாழ்ப்பாணம் (இசைத்துறை), குமாரதாஸ் ஆனைக்கோட்டை (ஓவியக கலை), மா.யோகராசா ஊர்காவற துறை (இசை), வே.கார்த்திகேசு - பருத்தித்துறை (நாடகம், சிற்பம்), சிசுபாரத்தினம் - கொடிகாமம் (இலக்கியம்), திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா -தெல்லிப்பளை (இலக்கியம்), திருமதி சேர்ச்சிலம்மா நவரெட்ணராஜா - பாசையூர் (நாடகம் இசை), வீத.இளங்கோவன - நல்லூர் (இலக்கியம்), பொ.கோபாலசாமி - கைதடி (இசை, நாதஸ்வரம்), க.சந்திரகுலசிங்கம் - கோண்டாவில் (நாடகம்), ந.சிவனேஸ்வரராஜ் - சாவகச்சேரி (யோகக்கலை), நீ.ம.பாலச்சந்திரன் - நாவாந்துறை (நாடகம்), திருமதி விஜயலட்சுமி இராசநாயகம் - வட்டுக்கோட்டை (இசை), கு.சரவணபவானந்தன் - யாழ்ப்பாணம் (இசை), ஆ.நா.சு.திருச்செல்வம - பருத்தித்துறை (ஊடகம்), தி.சனமுகசுந்தரம் - காரைநகர் (இசை, மிருதங்கம்), சி.சிவஞானராஜா - கொக்குவில் (இசை), க.லோகேஸ்வரன் - சுழிபுரம் (இசை, ஆர்மோனியம்), ப.ச.சிவானந்த சர்மா - சுனனாகம் (இலக்கியம்), மா.ஜெயானந்தன் ஆச்சாரியார் - பருத்தித்துறை (சிற்பக்கலை), அ.கனகராசா - பரந்தன் (இசை, ஆர்மோனியம்), த.ஜெகநாதன் - பூநகரி (பல்துறை), த.செல்வராசா - புதுக்குடியிருப்பு (நாடகம்), ந.சுப்பிரமணியம் - முள்ளியவளை (நாட்டுக்கூத்து), திருமதி க.கமலாம்பிகை - முள்ளியவளை (நாடகம்), சிவஸ்ரீ க.கு.கந்தசாமிக் குருக்கள் - குடியிருப்பு, வவுனியா (இலக்கியம், சோதிடம்), ஆ.பத்மநாதன் - நெளுக்குளம் வவுனியா (நாட்டுக்கூத்து), கா.முருகேசு - கண்டாவளை (நாட்டுக்கூத்து), பு.ஐயம்பிள்ளை - கற்குழி, வவுனியா (இசை, சமயத்துறை), லூ.லெம்பேட் - நானாட்டான் (நாடகம்), மு.மாரசிங்கம் - குடியிருப்பு வவுனியா (சமயம்), சி.சுப்பிரமணியம் - வவுனியா (இலக்கியம்), நா.கோபாலகிருஷ்ணன் - முள்ளியவளை (இசை, ஆர்மோனியம், மிருதங்கம்), யோ.சோமசுந்தரம் - வைரவப் புளியங்குளம் (இலக்கியம்), ச.ஞானசீலன் - அடம்பன் (நாட்டுக சூத்து), ச.சிவதாசன் - இலுப்பைக கடவை (இசை, வயலின்)


வாழ்க வளமுடன்

பெயர் :ஸ்ரீபியானுஜா
முகவரி: பூதர்மடம்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

அகவை 4 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




# விக்கினங்களை தீர்க்கும் விநாயகரின் பெருங்கதை விரதம் இன்று ஆரம்பம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய மூத்த திருக்குமாரர் பிள்ளையார். அவருக்குரிய விரதங்களில் இன்று ஆரம்பமாகின்ற பிள்ளையார் பெருங்கதை விரதமும் ஒன்றாகும். இந்தப் பிள்ளையார் பெருஙகதைப் படிப்பு அநேகமாகப் பிள்ளையார் கோவில்களிலேயே மிகச சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

விக்கினம் விலக்கியருளும் விநாயகப் பெருமானுடைய திவ்ய பெருங்கருணைக்குப் பாத்திரமாக இவ்விரதமே மிக உகந்ததாகும். கார்த்திகை கழிந்த பின்னாளில் இருபத்தோரிழை இன்புறக் கட்டி ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி ஆரம்பமாகின்ற இந்த விநாயக விரதம் மிகவும் சக்தி வாய்ந்தது. அருமையும் பெருமையும் மிக்க இவ்விரதம் இன்று முதல் தொடர்ந்து 21 நாட்களுக்கு அனுஷ்டிக்கப்பெறும்.

இறுதிநாள் விநாயக ஷஷ்டியுடன் பூர்த்தியாகும் மகிமை வாய்ந்த புனித புண்ணிய விரதத்தை அனுட்டித்துப் பயன்பெற்றோர் எண்ணிக்கை அளவிலடங்காதது இந்தப் பெருங கதை படிக்கும் புண்ணிய விரதம் நோற்க விரும்புவோர் காலை எழுந்து நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியாவந்தனம் முடித்து அருகிலிருக்கும் ஏதாவது ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் போய் தரிசனம் செய்து கொள்ள வேண்டும்.

அங்கு நிகழ்கின்ற விசேட அபிஷேக ஆராதனைகளில் பங்கேற்று பிள்ளையார் வணக்கத்துடன் விரதத்தை ஆரம்பிக்கலாம். தொடர்ந்து 21 நாட்களுக்கு பிள்ளையார் கதை படிக்க வேண்டும். இல்லையேல் படிப்பதைக் கேட்க வேண்டும். இந்த விரதகாரர் மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால்பழம் அருந்தலாம்.

முடியுமானால் இருபத்தொரு நாளிலும் சிவனடியார் ஒருவருக்கு அன்னதானமும் செய்யலாம். இறுதி நாளான விநாயக ஷஷ்டி நாளில் உபவாசமிருந்து 21 விதமான பல காரங்கள் படைத்து நிவேதனம் செய்து பிள்ளையாரை வணங்குதல் வேண்டும்.

இந்த விரதம் பற்றிய மகிமையும் மகத்துவமும் பிள்ளையார் கதையிலேயே மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்துடன் விநாயகப் பெருமான் நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடல்கள் பற்றியும் மிகவும் விளக்கமாக விதந்துரைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வினைகளை வேரறுக்கும் விநாயகப் பெருமான் பவளம் போன்ற திருமேனியை உடையவர். தம்மை வழிபட்டு நிற்கும் மெய்யடியார்களின் துன்ப துயரங்களை இன்னல் இடுக்கண்களையும் வேரோடு களைந்து அருள்புரிவார் என்று இப்பிள்ளையார் கதை கூறி நிற்கின்றது.

விக்கினங்களை நீக்குவதால் விக்கினேஸ்வரர் என்றும் கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குவதால் கணபதி என் றும் தனக்குமேல் வேறு தலைவன் இல்லாதபடியால் விநாயகர் என்றும் நாமங்களையுடைய பிள்ளையாருடைய அருட் பெருங கருணை யைப் பெற்றுக்கொள்ள இன்று ஆரம்பமாகின்ற பிள்ளையார் பெருங்கதை விரதம் அனுஷ்டிப்பதே சிறந்த வழியாகும்.

பொன்னுமிகும் கல்வி மிகும் புத்திரரோடெப் பொருளும் மன்னு நவமணியும் வந்தணுகும் உன்னி ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின் திருக்கதையைக் கேட்கச் சிறந்தது என்று சொல்லப்படுகின்றது. அதாவது உள்ளபடி நோற்றார் மிக வாழ்வார் நோவாது அருகிருந்து கேட்டோர்க்கும் கேடுவராது என்பது கருத்து.

இந்த விரதம் முறையாக நோற்றால் பிள்ளை இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் உண்டாகுமாம். இவ்வுலகிலே பெருஞ்செல்வம் கிடைக்கப்பெற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்வார்களாம்.

ஆகவே, இன்று ஆரம்பமாகின்ற பிள்ளையார் கதை விரதத்தை முறையாக அனுஷ்டித்து இவ்வுலகில் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று மகிழ்ச்சியான மங்கள வாழ்வுக்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

கலாபூஷணம்
தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# பாகிஸ்தான் தலிபான்களை அங்கீகரித்தது மிகத் தவறு

## முஷாரப் தெரிவிப்பு

(கராச்சி)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடாத்திய போது, அதை அங்கீகரித்தமை பாகிஸ்தான் செய்த மிகப் பெரிய தவறு, என, முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் அதிபரும், முன்னாள் இராணுவ தளபதியுமான முஷாரப், கராச்சி நகரில் நேற்று முன்தினம் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய தாவது, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆதிக்கம் செலுத்தி, அதிகாரத்தில் அமர்ந்தபோது, அதற்கு முதலில் அங்கீகாரம் அளித்தது, பாகிஸ்தான் தான். கொடூரமான அந்த ஆட்சியை அங்கீகரித்தமை, பாகிஸ்தான் செய்த மிகப் பெரிய தவறு.

அமெரிக்காவும், இந்த விடயத்தில் முக்கியமான தவறுகளை செய்துள்ளது. ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவுக்கு எதிராக போரிட்ட, 25 ஆயிரம் முஜாகிதீன்களுக்கு, போதிய நிவாரண பணிகளை அமெரிக்கா செய்து தரவில்லை. இதனால் தான், அவரகள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவி, அல் - குவைதா என்ற அமைப்பை துவக்கினர். அடுத்த தாக, அமெரிக்கா தலைமையில் "நேட்டோ" படைகள் ஆப்கானுக்குள் நுழைந்ததும், அங்கிருந்து வெளியேறிய பயங்கரவாதிகள் அனைவரும் மலைப் பிரதேசங்



களுக்குள் அடைக்கலமாகி விட்டனர். ஜம்மு - காஷ்மீர் பிரச்சினைக்கு சுமுக தீர்வுகாணும் வரை, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் பதற்றம் தொடரத்தான் செய்யும். இவ்வாறு, அவர் பேசினார்.

# விண்ணில் பாய்ந்தது ஓரியான் விண்கலம்




நாசா உருவாக்கிய புதிய வகை ஆளில்லா விண்கலம் ஓரியான், சோதனை முயற்சியாக நேற்று முன் தினம் விண்ணில் செலுத்தப் பட்டது.

கடந்த 3 ஆண்டு கால முயற்சியில் அமெரிக்காவின் நாசா மையம் உருவாக்கிய நவீன கேப்சூல் விண்கலம் ஓரியான் சோதனை முயற்சியாக இந்த ஆளில்லா ஓரியான் விண்கலம், டெல்டா4 ரொக்கெட் மூலம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப்கேனவரால் ஏவுதளத்திலிருந்து நேற்றுமுன்தினம் மாலை விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. இது விண்ணில் 3,600 மைல்கள் பயணம் செய்யும். புவிவட்ட பாதையில் 2 முறை ஓரியான் விண்கலம் சுற்றியபின், 4 மணி 30 நிமிடங்கள் கழித்து பசுபிக் கடலில் விழும். பஜா கலிபோர்னியா கடற்கரையிலிருந்து 600 மைல் தொலைவில் விழும் இந்த விண்கல கேப்சூலை மீட்கும் பணியில், அமெரிக்க கடற்படை வீரர்கள் ஈடுபடவுள்ளனர்.

# கச்சதீவு இந்தியாவுக்குரியது தமிழக சட்டசபையில் வலியுறுத்தல்

கச்சதீவின் அதிகாரத்தை இலங்கையிடம் இருந்து மீளப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக சட்ட சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தினால் இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானது.இதனை மீட்க இந்திய பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க எடுத்த நடவடிக்கைக்காக, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

# ஒபாமாவை சந்திக்கிறார் வில்லியம்

(லண்டன்)



பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம், மற்றும் அவரது மனைவி கேத் ஆகியோர், அடுத்த வாரத்தில் 3 நாள் பயணமாக அமெரிக்கா செல்கிறார்கள். வொஷிங்டனில் அமெரிக்க அதிபர் ஒபாமா மற்றும் துணை அதிபர் ஜோயி பிடென் ஆகியோரை சந்திக்கவுள்ளனர்.

கடந்த 2011இல் லண்டனில் ஒபாமா, வில்லியம்ஸ் மற்றும் கேத்தே தம்பதியரை சந்தித்தார். அதன் பின்னர் தற்போது, வில்லியம்ஸ் மற்றும் கேத்தே தம்பதி முதல்முறையாக அமெரிக்கா சென்று ஒபாமாவை சந்திக்கிறார்கள்.

# பிலிப்பைன்ஸை மிரட்டும் 'ஹகுபிட்' 5 இலட்சம் மக்கள் வெளியேற்றம்

(மணிலா)



சமீப காலமாக பிலிப்பைன்ஸ் நாடு புயல் தாக்குதலுக்கு ஆளாகிறது. ஆண்டுக்கு குறைந்தது 20 புயல்கள் தாக்குகின்றன. பருவநிலை மாற்றம் காரணமாக இச்சம்பவங்கள் நடப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 13 மாதங்களுக்கு முன்பு இங்கு 'ஹயான்' புயல் கடுமையாக தாக்கியது. அதில், 7,300 பேர் பலியாகினர். 41 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேற்றப் பட்டனர்.

இந்த நிலையில், தற்போது 'ஹகுபிட்' என்ற புதிய புயல் பசிபிக் கடலில் உருவாகியுள்ளது. அது பிலிப்பைன்ஸ் நாட்டை நெருங்கி வருகிறது. அது மணிக்கு 240 கி.மீற்றர் வேகத்தில் வீசும். கனமழை பெய்யும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடும் பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதால் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமர், லெய்ட் மற்றும் சிபு ஆகிய தீவுகளில் கடற்கரையோரம் உள்ள கிராமங்கள் மற்றும் நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளில் தங்கியிருக்கும் பொது மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இங்கிருந்து மொத்தம் 5 இலட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிகள், மற்றும் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

'ஹயான்' புயல் பாதித்த லெய்ட் தீவு தலைநகரான டக்லபானில் மட்டும் 26 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு 19 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 'ஹகுபிட்' புயல் மிரட்டல் காரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டில் 150 விமானங்களின் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டுள்ளன. துறை முகங்கள் மூடப்பட்டுள்ளன. கடல் போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

உலகச் செய்திகள்

# தலையை துண்டித்து கொலை தொடரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அட்டூழியம்



சிரியாவில் சிறை பிடிக்கப்பட்ட இராணுவ படையினரை மிக கொடூரமாக ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தலை துண்டித்து படுகொலை செய்வது போன்ற வீடியோ வெளியாகியுள்ளது.

சிரியாவின் டெயில் எஸோர் என்ற இராணுவ விமான நிலையத்திற்கு அருகே உள்ள அரசாங்க தளத்தின் மீது ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

அத்துடன் அங்கிருந்த சிறைப்பிடிக்கப்பட்ட படையினருக்கு தலை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றியுள்ளனர். இந்தக் காட்சிகள் அடங்கிய வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த வீடியோவில், தலை துண்டிக்கப் படும் முன் படைவீரர்கள் தீவிர வாதிகளிடம் தங்களது உயிர்களுக்காக கெஞ்சுகின்றனர்.

அத்துடன் இராணுவ விமானத்தளத்தில் இருந்த இராணுவ உபகரணங்களை திருடுவது போன்ற காட்சிகளும் உள்ளன.


மேலும் அதில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர வாதிகள் போர் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்துவது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

# 1008 லீற்றர் பாலாபிஷேகம்

இந்தியாவில் புகழ் பெற்ற தஞ்சை மூலைஅனுமார் கோவிலில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிப்பெயர்ச்சி சிறப்பு வழிபாடு நடைபெறவுள்ளது அன்று மாலை 5 மணிக்கு மூலைஅனுமாருக்கு 1008 லீற்றர் பாலாபிஷேகமும், இரவு 7 மணிக்கு சிறப்பு அலங்காரமும், தீபாராதனையும் நடக்கிறது.

சனிப்பெயர்ச்சியையொட்டி மேடம், ரிஷபம், சிம்மம், துலாம், விருச்சிகம், தனுசு, கும்பம் ஆகிய ராசிக்காரர்கள் சனிப்பெயர்ச்சி அன்றும், ஒவ்வொரு சனிக்கிழமை அல்லது அமாவாசை தினத்தில் 18 அகல்தீபம் ஏற்றி 18லிற்றர் பால்அபிஷேகம் செய்து, 18 முறை மௌனமாக கோவிலை வலம் வந்து சனிதோஷ் நிவர்த்தி காணிக்கையாக ரூ.18-ஐ உண்டியலில் செலுத்தி சிதறு தேங்காய் உடைத்து சென்றால் சனிதோஷம் விலகும் என்பது இந்த கோவிலின ஐதீகம் ஆகும்.


# ஒக்ஸ்பேர்ட் அகராதியில் 1000 புதிய வார்த்தைகள்




150 வருடங்கள் பழமை வாய்நதது, உலகப்புகழ்பெற்ற ஒக்ஸ். போர்டு அகராதி நிறுவனம். ஆங்கிலம் பேசும் நல்லுலகத்திற்காக தன்னிடம் 6 இலட்சம் வார்த்தைகளை வைத்துள்ள அந்நிறுவனம், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புதிதாக அறிமுகமாகும் சொற்களை இணைத்துக் கொள்வது வழக்கம்.

அதன்படி நடப்பு காலாண்டுக்கான தர மேம்படுத்தலில் 1000 புதிய வார்த்தைகளையும், சொற்றொடர்களையும் இணைத்துள்ளது. பதின்ம உரையாடல், விளையாட்டு சொல்லியல், மற்றும் வணிக வழக்குமொழி போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த வார்த்தைகளை தங்களது ஆன்லைன் அகராதியில் புதிதாகச் சேர்த்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த அகராதி, ஆங்கில வெகுஜன மக்களின் கலாசாரத்தைச் சார்ந்த வார்த்தைகளையும், சில விரிவாக்கங்களையும் இணைத்துள்ளது.

# இணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம்
# மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்



ஆட்சியில் இருப்பவர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்திகொள்வதன் மூலம் தான் எமது இனத்தின் தேவைகளை இன்றைய கால அரசியல் நீரோட்டத்தில் பெற்றுக் கொள்ள முடியும் - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆயுத வழியை நம்பி அழிந்துபோன வரலாறுதான் எமது இனத்துக்கு மிஞ்சியது. நாங்கள் எப்போதும் தென்னிலங்கையில் பேரம் பேசக்கூடிய சக்தியாக தான் இருக்க விரும்புகின்றோம் ஆனால் தமிழ் மக்கள் எமக்கு இதுவரை அதற்கான அங்கிகாரத்தை முழுமையாகத் தரவில்லை என்பது தான் வேதனையான விடயம்.

ஓட்டப்பந்தையத்தில் யார் முதலிடம் பிடித்தாலும் அவர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு எமது மக்களுக்கான தேவைகளை பெற்றுக் கொடுக்கும் இணக்கமான வழிமுறையைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 1987இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய இலங்கை ஒப்பநத்திலிருந்து இன்றுவரை மேற்கொண்டு வருகின்றார்.

எம்மிடமுள்ள அரசியல் பலம் அபிவிருத்திக்கான பேரம் பேசலை மேற்கொள்வதற்கு போதுமானதாகவே இதுவரைகாலமும் இருந்து வருகின்றது. வரும் காலத்தில் தமிழ் மக்கள் தமது தலைவிதியை மாற்றியமைக்க சிந்தித்துச் செயற்படுவார்களேயானால் நிச்சயம் எமது அமைச்சரது கரங்கள் அரசியல் ரீதியாக அசுரபலம் பெறும் என நம்புகின்றோம்.

வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் தான் ஒவ்வொரு கிராமத்தினதும் அடிமட்ட மக்களிலிருந்து அனைத்து மக்களையும் தொடர்புபடுத்தும் சதனமாக விளங்குகின்றனர். இதனால் தான் உங்களூடாக எமது அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தையும் மக்களுக்கு செய்து வருகின்றோம். உங்களது தெரிவுகள் ஒவ்வொன்றும் மக்கள் நலன் சார்ந்ததாக அமையவேண்டும் என்பதுதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது விருப்பமாகும் என்றார்.

இந்த சந்திப்பில் மானிப்பாய் தொகுதி பொறுப்பாளர் ஜீவா, மற்றும் பொதுச்சபை உறுப்பினர்கள் ஆகியோருடன் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## எதிர்காலத்தில்...

எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அப்போதே எமது மக்கள் சுயநிர்ணய உரிமையை பெற்றிருக்க முடியும். ஆனால், அதைவிரும்பாத சுயலாப அரசியல்வாதிகள் மீண்டும் மக்களை அவலத்திற்குள் தள்ளி முள்ளிவாய்க்கால் அவலம் வரையில் இட்டுச் சென்றனர்.

இந்நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலில் வென்று வடக்கு மாகாண சபையை கைப்பற்றி ஒருவருடம் கடந்துள்ள போதிலும் அவர்களால் எவ்விதமான அபிவிருத்திகளை மட்டுமன்றி மக்களது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

இருந்த போதிலும், மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக தமது சுகபோக வாழ்வை அனுபவித்து வருவது மட்டுமன்றி அவர்களுக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை முன்னெடுப்பதில் அக்கறையின்மையும் விருப்பமின்மையும் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

உலக வரலாற்றில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜெர்மன், ஜப்பான் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா குண்டுத் தாக்குதல்களை நடத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்தி இருந்த போதிலும், காலமாற்றத்தில் குறித்த இரண்டு நாடுகளிலும் ஆட்சிக்கு வந்த தலைமைகள் அமெரிக்காவுடன் கைகோர்த்ததன் பிரகாரமே இரண்டு நாடுகளும் அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றத்தை கண்டுள்ளன.

இதேபோன்றுதான், எமது மக்களின் அரசியல் உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் வென்றெடுப்பதற்கு அதிகாரத்தில் இருப்பவரையும் வரக்கூடியவருக்கும் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென்பதுடன் அதன்மூலமே எமது மக்களுக்கான பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் தெரிவித்தார்.

எமது மண்ணில் மக்கள் கையேந்தும் நிலையிலிருந்து மாற்றப்பட வேண்டுமென்பதே எமது முக்கிய இலக்காகும். இதற்கு மக்கள் சரியான நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இதனிடையே வடமாகாணத்தில் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக 250 கோடி ரூபா செலவில் அடுத்தாண்டு முற்பகுதியில் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அதனூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய கரையோர மாவட்டங்களில் 255 கடலோர கிராமசேவையாளர் பிரிவுகளில் கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் குறித்த செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி எமது மக்களுக்கு கெளரவான ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுப்பதே பிரதான நோக்கமென்பதுடன் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட தொழில்முறையான இறால் கூடு பாயும் தொழில் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் மாற்று ஏற்பாடு அல்லது மாற்றுத் தொழில் கிடைக்கும் வரை சுதந்திரமாக இத்தொழிலை மேற்கொள்ள முடியுமென்றும் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது அனுமதிக்கவோ வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே தென்மராட்சியிலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களை ஒன்றிணைத்து சமாசத்தை புதிதாக கட்டியமைக்கவோ அல்லது புனரமைக்கவோ விரைவில் உடனடியாக நடவடிக்கையினை எடுக்குமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதனுக்கு தொலைபேசி வாயிலாக விசேட பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கச்சாய், தனங்கிளப்பு, கெற்பேலி, கோவிலாக்கண்டி, (கைதடி நாவற்குழி தெற்கு), மறவன்புலவு, பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்த அதேவேளை, பிரதிநிதிகளது தேவைப்பாடுகள் கோரிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் அலெக்ஸ்சாண்டர் சாள்ஸ் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## வேட்பாளர்களின்...

போர் முடிந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறோம்.

மைத்திரிபால சிறிசேனவோ அல்லது போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களோ, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகிறார்கள் என்று அறிந்து கொள்ளக் கூட்டமைப்பு விரும்புகிறது.

இதற்கான பதிலை நாம் வேட்பாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். அவ்வாறு பதிலளித்தால் அவர்களுடன் பேசுவோம்.

இறுதி முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள எல்லாக் கட்சிகளும் இணைந்தே மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கள்ளமாக மரங்களை கடத்திய உழவு இயந்திரம் மடக்கிப் பிடிப்பு
## முழங்காவிலில் சம்பவம்

(முழங்காவில்)

முழங்காவில் காட்டுப்பகுதியில் கள்ள மரங்களுடன் உழவு இயந்திரம் ஒன்று இராணுவத்தினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று நள்ளிரவு ஒருமணியளவில் முழங்காவில் காட்டுப்பகுதியில் களவாக காட்டுமரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக முழங்காவில் பிரதேச இராணுவ அதிகாரிக்கு கிடைத்த தகவலையடுத்து இராணுவத்தினர் அப்பகுதியை சுற்றிவளைத்தபோது உழவு இயந்திரத்துடன் 2 இலட்சம் ரூபா பெறுமதியான மரங்களையும் கைவிட்டு சந்தேக நபர்கள் தப்பியோடிய நிலையில் மீட்கப்பட்ட உழவு இயந்திரம் முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டதுடன் உழவு இயந்திரம் முழங்காவில் பொலிஸாரினால் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (36)

# கரைஒதுங்கிய மீனவர்கள் இன்று நாடு திரும்புகின்றனர்





கடந்த 28ஆம் திகதி படகு பழுதடைந்து மாதகல் கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கிய 3 இந்திய மீனவர்கள் (காளியப்பன், குமரன், காளிதாஸ்) இன்று காலை காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக நாடு திரும்புகின்றனர்.

இவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள புஷ்பவனம் என்ற கிராமத்தை சேர்ந்தவர்கள். மீனவர்களை இந்திய பதில் தூதர் தட்சணாமூர்த்தி நேற்று மதியம் சந்தித்து நாடு திரும்பும் விபரத்தை தெரியப்படுத்தினார். கால நிலையும் கடல் கொந்தளிப்பும் அதிகமாக இருந்ததால் மீனவர்கள் நாடு திரும்புவது காலதாமதமானது. மீனவர்களுக்கு உதவிய இலங்கை மீனவர்கள் மற்றும் கடற்படை அதிகாரிகளுக்கும் பதில் தூதர் நன்றிகளைத் தெரிவித்தார்.

## அக்காவின்..

நெல்லியடி பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தவேளை திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதாக சந்தேக நபர் தெரிவித்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார்தொவித்தனர். (18)

## வேலணை...

டைகள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தொலைபேசி விற்பனை நிலையத்தில் சி.சி.ரி கமரா பொருத்தப்பட்டிருந்தமையால் இருளிலும் கொள்ளையர்களின் உருவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியுமென ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (21)

## இலங்கைத்...

இந்த மாநாடு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீர்வை நோக்கி. 'இந்திய மீனவர்கள் பிரச்சினையில் தீர்வை நோக்கி' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

இதில், "இலங்கைப் பிரச்சினையில் தீர்வை நோக்கி" என்ற கருத்தரங்கில் அண்மையில் இலங்கை சென்று வந்த பா.ஜ.க.தேசிய பொதுச்செயலாளர் முரளிதர்ராவ் பங்கேற்கிறார்.

'இந்திய மீனவர்கள் பிரச்சினையில் தீர்வை நோக்கி' என்ற தலைப்பில் நடைபெறும் கருந்தரங்கில் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் கலந்துகொள்கிறார். கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் மத்திய அரசிடம் சமர்பிக்கப்பட்டு, இலங்கைப் பிரச்சினை, மீனவர்கள் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரிஷாத்தின் கட்சி ஜனாதிபதிக்கு ஆதரவு



(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளதாவது;

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று நடாத்திய சந்திப்பின் போது அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதிக்கான தமது கட்சியின் ஆதரவைத் தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சந்திப்பின் போது தமது பரிந்துரைகள் சிலவற்றை நடைமுறைப் படுத்துமாறு மக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் மகஜரொன்றையும் கைளளித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி ஒவ்வொரு சமயத்தவரும் உரிமைகளை பாதுகாப்பது தனது கடமை எனத் தெரிவித்தார்.

# இன்று யாழ். வருகிறார் வைத்தியலங்கா திஹார

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள ரவி வைத்தியலங்கா திஹார இன்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய றொகான் டயஸ் இரத்தினபுரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதனை அடுத்து அவரது இடத்திற்கு பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றிய வைத்திலங்கா திஹார நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். (25)

# பொலிஸ் நிலைய மதிலை உடைத்து தப்பியவர் கைது

(நெல்லியடி)

நெல்லியடி பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பித்து சென்ற சந்தேகநபரை (வயது 29) துன்னாலை குடவத்தை பகுதியில் வைத்து நேற்று கைது செய்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

வல்லிபுர பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட நபரையும் கன்ரர் ரக வாகனத்தையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

வாகனத்தை பொலிஸ் நிலையப் வளாகத்தில் ஒதுக்குபுறமாக விடுமாறு சந்தேகநபருக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாகனத்தை ஒதுக்குபுறமாக விடுவது போன்று பாசாங்கு செய்து விட்டு பொலிஸ் நிலைய மதிலை உடைத்து வாகனத்துடன் தப்பியோடியுள்ளார். அவரை பின் தொடர்ந்த பொலிஸார் துன்னாலை குடவத்தை பகுதியில் வைத்து கைது செய்தனர்.

சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர.

# 35 கண்காணிப்பாளர்கள் வெளிநாட்டிலிருந்து வருகை

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதற்காக 35 வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர் எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக 15 ஆயிரம் உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாடு முழுவதும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் பவ்ரல் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

PAFFREL

# பரந்தனில் விபத்து இளைஞர் உயிரிழப்பு

பரந்தன் பூநகரி வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் அநுராதபுரத்தைச் சேர்ந்த சுராஜ் இந்திக சில்வா (வயது-18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

ஒப்பந்த நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பிரஸ்தாப இளைஞன் வேலை முடித்து இரவு உணவுக்காக பாண் வாங்குவதற்கு மோட்டார் சைக்கிளில் பரந்தன் நோக்கி வந்தவேளையில் இரவு 8.40 மணியளவில் வாகன விபத்து இடம்பெற்றுள்ளது.

இளைஞனின் மோட்டார் சைக்கிளை மோதிய அடையாளம் தெரியாத வாகனம் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளது.

சம்பவம் குறித்து கிளிநெச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நேற்று இரவு கொண்டு செல்லப்பட்டது. (81)

# மைத்திரிக்கு ஆதரவு ஐ.தே.க. தீர்மானம்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற வருடாந்த மாநாட்டில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர், பிரதித்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொதுவேட்பாளருக்கு ஆதரவளிப்பது மற்றும் கட்சி எதனை மையமாகவைத்து பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற யோசனையை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்மைக்கல் பெரேரா வாசித்தார்.

இதன்பின்னர் உரையாற்றிய ரணில் முதல்முறையாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்தார். மைத்திரியை ஆதரவளிக்கும் தியாகத்தை தான் செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் வென்ற பின்னர் நாடாளுமன்ற தேர்தலைநடத்துவோம், மக்கள் தங்களுக்கு நாடாளுமன்றத்தில் யார் தேவை என தீர்மானிப்பார்கள், எனினும் இரண்டு வருடங்களுக்கு தேசிய அரசை அமைப்பது குறித்தே கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


## Vacancy in Qatar

بسم الله الرحمن الرحيم

شركة همام وأخوانه (ذ.م.م)

H&B Hammam & Brothers Co. (W.L.L)

تليفون : ٤٤٥٠٣٢٨٨ - فاكس : ٤٤٦٠١٣٥٥ - س.ت : ١٨٠٣٨ - ص.ب : ١٩٨٨٦ - الدوحة - قطر

Tel Off: 44503288 - Fax: 44601355 - C.R. No: 18038 - P.O. Box : 19886 - DOHA - QATAR

E-Mail : hambrosco@qatar.net.qa

**REQUIRED**

**Accountant, Store Keeper, Sales man**

**Particulars:**

Nationality :- Srilanka.
Sex :- Male
Status :- Any
Age :- 25 -35

**Qualification :** B.Com Hons.

**Work Position :** Account, Cashier, Auto Parts Store Keeping and or Auto Parts Salesman.

**Mandatory Experience:**

Experiance in Tally Erp. 9 & As well as Microsoft Office Package.
Five yrs Experience in Sri Lanka. In (Accoount /Audit/Marketing/ Sale) Fluent in English (Speaking & Writing)

**Prefrence :**

Gulf Experience 3 Years.
Gulf Driving Licence.

**Salary & Other Benefits :**

Basic Salary : Qr 2000 to 2500/=
Other Benefits as per Company & Government Regulation

**All C.V.Applications Must be Sent to the Following**

*Mr.Bader Hammam*
*General Manager*
*Hammam & Brothers Co.*

E.mail : abba.hammam@gmail.com (R/381) Mobile : 00974-55543820


# இளம் இலங்கை குடும்பத்தை நௌரு கொண்டு செல்ல எதிர்ப்பு



மேற்கு அவுஸ்ரேலியாவில் உள்ள பேர்த் தடுப்பு முகாமில் இருந்து, இளம் இலங்கைக் குடும்பம் ஒன்றை நௌருவில் உள்ள தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

எட்டு மாதங்களுக்கு முன்னர் அவுஸ்ரேலியாவில் புகலிடம் தேடிய இலங்கையைச் சேர்ந்த இளம் தம்பதிகள், பின்னர், நௌரு தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு குழந்தை பிறக்கவிருந்த நிலையில், மீண்டும் பேர்த்தில் உள்ள தடுப்பு முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர்.

தற்போது அவர்களுக்கு குழந்தை பிறந்து ஆறு மாதங்களான நிலையில், மீண்டும் நேற்று நௌரு தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக, டார்வினில் உள்ள தடுப்பு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பேர்த் தடுப்பு முகாமில் இருந்து இவர்களை டார்வினுக்கு அனுப்புவதற்காக விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர்கள் சென்ற வாகனத்தை மறித்து அவுஸ்ரேலிய அகதிகள் உரிமைக்கான நடவடிக்கை வலையமைப்பை சேர்ந்த சட்டவாளர்கள் போராட்டம் நடத்தினர்.

எனினும், அவுஸ்ரேலிய காவல்துறையினர் அவர்களை பலவந்தமாக இழுத்துச் சென்று அகற்றிய பின்னர், இலங்கைக் குடும்பத்தினரை விமானம் மூலம் டார்வினுக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவர்கள் உள்ளிட்ட 25 குடும்பத்தினரை அவுஸ்ரேலிய அரசு நௌரு தடுப்பு முகாமுக்கு அனுப்பவுள்ளது.

எனினும், அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் வரும் ஜனவரி மாதம் வரை எவரையும் நௌருவுக்கு அனுப்பப் போவதில்லை என்று அறிவித்துள்ளதால், டார்வின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.